ஸ்ரீ சக்ர நாயகி

அம்மன் பாடல்கள்

கலைமாமணி
டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்

ஸ்ரீ சக்ர நாயகி!

ஆசிரியர்

கலைமாமணி

டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்

நெய்தல் பதிப்பகம்

நூல் விவரம்

❍ நூற்பெயர் :
ஸ்ரீ சக்ர நாயகி!

❍ ஆசிரியர் :
கலைமாமணி
டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்

❍ உரிமை :
எஸ். அம்சவள்ளி
(W/o, Late. Dr. Ulunthurpettai Shanmugam)

❍ அச்சிட்டோர் :
பிராசஸ் இந்தியா
294, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 14.

❍ பதிப்பு : 2011

❍ பக்கம் : 148

❍ விலை : **90/-**

❍ நூலாக்கம் :
டெலிபாய்ன்ட்
16, சின்னப்ப தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை - 5.
Ph : 2848 3750

❍ For Sales &
Enquiries Contact : **S. AMSAVALLI**
14, Amirtham Avenue, Bharani Street,
Velacherry, Chennai - 600 042.
Mobile : 9380297675, 9566042884
email : ussankarram@gmail.com
ussankarram@yahoo.com

❍ காப்பிரைட் சட்டத்தின் கீழ் பதிவு பெற்றுள்ள இந்நூலில் இருந்து எப்பகுதியையும் முன் அனுமதியின்றிப் பிரசுரிக்கக்கூடாது. தவறினால் சிவில், கிரிமினல் சட்டங்களின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

வெளியீடு : நெய்தல் பதிப்பகம்
எண் : 5, தங்கவேல் வைத்தியர் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை -5
Phone : 2848 3860
Mobile : 98415 37495
Email : neithalp@yahoo.in



சண்முகனார் சாஸ்வதமாய் வாழ்கிறார்!

— வாலி —

ஓர்
ஒப்புராயர் இல்லாச்
சுப்புராயச் செட்டியாரும்; பாற்-
கடலில் விளையாது - நற்றாயின்
குடலில் விளைந்த
அமிர்தம்
அம்மையாரும்;

ஆற்றிய தவத்தால்
அரும்பிய பிள்ளை;
தொன்மைத் தமிழ்த்தாயின்
தோளில் தொத்திய கிள்ளை;

என்
உழுவலன்பர்
உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்;
அருங்குண வதியாம்
அம்ச வல்லியாரின்
மஞ்சளில்;
மாங்கல்யத்தில்;
ஒளிவீசி நின்ற
ஒண்முகம்;

இதழ்களில்
இளம் புன்னகையை வைத்து
தன்வயம் எவரையும் ஈர்த்த
தண்முகம்;
நுவலும் பேச்சிலும்.
நோற்கும் பாட்டிலும்.
நுழைபுலம் துலங்க நிற்கும்
நுண்முகம்!

*   *   *

உருவம் குறில்;
உள்ளம் நெடில்; அவன்
உண்ணா
உயர்தமிழ் குடியிருக்கும் குடில்;
ஆறுமுகனையும்.
ஆனைமுகனையும்.
அதிகம் பாடியதாய்
ஆரைச் சொல்வது அவனை விடில்?

*   *   *

இவனால் தான்
இவன் பிறந்த
உளுந்தூர்ப்பேட்டை - தமிழ்
எழுந்தூர்ப்பேட்டை ஆனது;
இவன்
இயற்றிய
தனிப்பாடல்களாலும்;
திரைப்பாடல்களாலும்;

கானத்தமிழ்
கடல்கள் தாண்டி -
உலகத்தார்
உட்செவிக்குள் போனது!

*   *   *

வேங்கடவன்;
வேலவன்;
வேழமுகன்;
வாயு மகன்;
இன்னும்
இறையருள் பெற்ற.....
வேதாத்தரி;
விசிறி சாமியார்;

என
எந்த -
இறையும்;
இறையடியாரும் மிச்சமின்றி.....
இவனது -
பாடுபொருள் ஆயினர்; இவன்
பசுந்தமிழில் தோய்ந்து போயினர்!

*   *   *

கண்ணதாசன் போல் - இந்தக்
கவிப்பெருந் தகையும்....
பெரியாரிடமிருந்து
பெருமாளிடம் வந்தவன்;
தான்பெற்ற இன்பம் - இந்தத்
தரணிபெற வேண்டி -
ஆன்ம
அனுபூதியை -
வையம் உய்யுமாறு
வண்ணச் சிந்துகளில் தந்தவன்!

*   *   *

சுருங்கச்
சொன்னால்....

இருந்தமிழ்
இவனது
நாவகம் தன்னில்
சேவகம் செய்தது; இவன்
ஏந்திய
எழுதுகோல் வழி...
அது
அகிலமெங்கும்
அருட்பயிர் தழைக்க - இடை
அறாது ஞானமழை பெய்தது!

* * *

பக்திப்
பனுவல்களை மட்டுமல்ல; அவன்
பாடாத துறை
பாக்கியென்று எதைச் சொல்ல?

* * *

கோடம்பாக்கத்திலும் - அவன்
கோலோச்சிய மேதை;
'சீர்காழி' யும் -
'சிவாஜி' யும் -
அகத்தியனாயும்; சோழ -
அரசை ஆண்ட ராஜராஜனாயும் -
வெள்ளித்திரை
வீதியில்
உலா வர
உளுந்தூர்ப் பேட்டை தான்....
போட்டுக் கொடுத்தான்
பாட்டுப் பாதை!

* * *

அவன்
ககனம் ஏறினான் - தமிழ்
கானங்களை இங்குவிட்டு; அவன் -
இறந்தும்
இறவா திருப்பதை -
இசைக்கிறது
இசைத்தட்டு!

* * *

ஆம்;
உளுந்தூர்ப் பேட்டை சண்முகம் - எனும்
உயரிய கவிஞரேறு....
இசையொடு
இசையில் வாழ்கிறான்;
இசை தழுவும் - எண்
திசையில் வாழ்கிறான்!

* * *

ஏட்டிலும்
பாட்டிலும் - அவனது
ஏரார் புலமையினை
ஏந்தி நிற்கின்றன....

அவன்
அழகுற -
வடித்து வைத்த
வண்ணத்தமிழ்ச் சொற்கள்; அவற்றின்
வண்ணங்கெடாது காக்கின்றனர்
வாரிசாய் வந்த மக்கள்!

* * *

நல்ல மனைவி;
நல்ல மக்கள்;

நல்ல பெயரன்கள்;
நல்ல பெயர்த்திகள்;

இவர்களின்
இதயங்களில் மட்டுமல்ல -
எம்மனோர்
எண்ணங்களிலும்...

சண்முகனார் கீர்த்தி
சாஸ்வதமாய் நிற்கும்;
சமூகம் - அவனது
சிந்துகளிலிருந்து -
வாழ்வாங்கு
வாழ -
கருத்துகளைக்
கற்கும்!

* * *

வாலி

கலைமாமணி
டாக்டர். உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்
ஒரு சிறு குறிப்பு

கவிஞர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம், விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்ப்பேட்டையில் 10-04-1933 ஆம் ஆண்டு பிறந்தார். தொடக்கக் கல்வியைச் சொந்த ஊரில் கற்று, பின்னர் உயர்நிலை, கல்லூரிக் கல்வியை திருச்சி, அர்ச்.சூசையப்பர் கல்லூரியில் பயின்று, சென்னை பச்சையப்பனில், டாக்டர் மு.வ. அவர்களின் மாணவனாக எம்.ஏ. முதல் வகுப்பில் 1960-ல் தேர்வு பெற்றார். எம்.லிட் ஆய்வும், டாக்டர் பட்ட ஆய்வும் மேற்கொண்டு பட்டங்கள் பெற்றுள்ளார். 1972 வரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகவும், அதன்பின் 1974 வரை, சென்னை சேலையூர் எஸ்.ஐ.வி.இ.டி. கல்லூரியில் துறைத்தலைவராகவும், பேராசிரியராகவும் பணியாற்றினார். 1975 முதல் 1978 வரை தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் மொழி பெயர்ப்புத்துறை உதவி இயக்குநராகப் பணியாற்றிய இவரை 1978-ல் அரசு தமிழ் பண்பாட்டு மைய இயக்குநராக நியமித்தது.

நாடறிந்த பாவலராகிய இவர் பெற்ற விருதுகள் பல. சென்னை ஆரோக்ய ஆசிரமம், இவரின் பக்திப் பாடல்களின் சிறப்பைப் பாராட்டி 'பக்த சிகாமணி' (1971) என அழைத்தது. தமிழ் சான்றோர்களின் அமைப்பான திருப்பனந்தாள் பாவலர் மன்றம், இவரின் சந்தக் கவிதைகளைப் பாராட்டி 'இசைக்கவியரசு' (1972) என்ற பட்டத்தை அளித்தது. 1975-ல் தமிழ்நாடு அரசு இயலிசை நாடக மன்றம் மிகச் சிறந்த விருதான 'கலைமாமணி' விருது தந்து தங்கப்பதக்கம் சூட்டி மரியாதை செய்தது. சென்னை உலகசமூதாய சேவா சங்கம் இவரின் தவப்பயிற்சிக்கு 'அருட்செல்வர்' (1983) என்ற பட்டம் சூட்டிற்று. சென்னை இலட்சுமி நாராயணா நிறுவனம், ஒலிப்பதிவுத்துறைப் பக்திப்

பாடல்களில் இவர் முன்னணி வகிப்பதைப்பாராட்டி 'தெய்வீகக் கவிஞர்' (1989) என்ற விருதினை உவந்தளித்தது. சென்னை திருவல்லிக்கேணி முருகனடியார்கள் சங்கம், இராஜா அண்ணாமலை மன்றத்தில் இறை இசை விழா நடத்தி இவருக்கு 'பெருங்கவிஞர்' (1994) எனும் பெருமையைத் தந்தது.

கவிஞர் உ.பே.ச. அவர்கள், அகவுணர்வுப் பாடல்கள், சமுதாயப் பாடல்கள், தேசிய உணர்வுப் பாடல்கள், மொழிப்பெயர்ப்பு பாடல்கள், பக்திப் பாடல்கள், தன் உணர்வுப்பாடல்கள், கவியரங்கப் பாடல்கள், நிகழ்ச்சிப் பாடல்கள் என பல்வேறு துறைகளில் இயற்றிய பாடல்கள் ஐயாயிரத்தை எட்டும் இவர் எழுதிய மகாகவி பாரதியாரின் வரலாற்றை யாழ்ப்பாணம் 'ஈழநாடு' இதழ் தொடர்கட்டுரையாக வெளியிட்டுள்ளது. இவரின் பக்திப் பாடல்கள் மூவாயிரத்திற்கும் மேல் இசைப்பதிவாகி முன்னணிப் பாடகர்களால் பாடப்பெற்று ஒலி நாடாக்களாகவும், குறுந்தகடுகளாகவும், உலகெங்கும் உலா வருகின்றன, மக்களை மகிழ்விக்கின்றன.

இவர் இருபதுக்கும் மேலான சிறந்த வடமொழி தோத்திரப்பாக் களை தமிழில் மொழிப்பெயர்த்துள்ளார். அவற்றுள் பம்பாய் சகோதரிகள் பாடிய T.Series தயாரிப்பில் வெளிவந்த ஸ்ரீ வேங்கடேச சுப்ரபாதம், வெளியிடப்பட்ட அன்றே ஒரு லட்சம் ஒலி நாடாக்கள் விற்றதனால் 'தங்கத்தகடு' (Golden Disk) விருதினைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

வானொலி, தொலைக்காட்சி, தனியார் தொலைக்காட்சி, இசைமேடைகளில் இவரது பாட்டும், பேச்சும், அவ்வப்போது இடம்பெறும், திரை உலகிலும் இவர் பல பாடல்களை இயற்றியுள்ளார்.

தமிழ்நாட்டின் பெருங்கவிஞரான இவர் தனது மனைவி திருமதி. அம்சவள்ளியுடன் 48 ஆண்டுகள் இல்லறம் நடத்தி மக்கட் செல்வம் பெற்று, தனது இறுதிக் காலங்களை ஆன்மீகத்தில் பெரும் ஈடுபாடுடன் கழித்தார். உலகத் தமிழர்களின் மனதில் குடிகொண்ட அவர் தனது 71 ஆம் வயதில் 24-08-2003ல் இறைவனடி சேர்ந்தார்.

நெய்தல் பேசுகிறது....

புரத்தில் பிறந்தவர் மகாகவி - ஆம்
எட்டைய புரத்தில் பாரதியார்.
பட்டியில் பிறந்தவர் இரு கவிஞர்
சிறு கூடல்பட்டி கண்ணதாசன் - வடுகப்பட்டி வைரமுத்து
கோட்டையில் பிறந்தவர் சுந்தரம்
பாட்டுக்கோட்டை - யாம்
பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
அரங்கத்தில் பிறந்தவர் வாலிப வாலி
ஸ்ரீரங்கம் என்னும் திருவரங்கத்தில்
குடியிலே பிறந்தவர் ஒரு கவிஞர்
ஆலங்குடி சோமு
பேட்டையில் பிறந்ததோ பன்முகம்
இசைப் பண் முகம் - அவர்தான் எங்கள்
உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்
தந்தை சுப்புராயர் தாயார் அமிர்தம் - என்றும்
சிந்தை யெல்லாம் பாட்டு அமிர்தம்
எந்தை தமிழுக்கு சண்முகம் அம்சம் - துணைவி
வந்தார் அம்ச வள்ளியாம் அம்சம்.

இறைவனைத் துயில் எழுப்ப சுப்ர - பாதம்
இம்மக்கள் விழித்திட எழுப்பிட இசைப் - பாடல்
எழுப்புவது இவர்வேலை யானால்.

இவர் ஊரென்ன - உளுந்தூர்ப்பேட்டை
பேட்டை துள்ளி ஆடி எழ வைக்கும் பேட்டை

ராஜபாட்டை யாம் உளுந்தூர்ப்பேட்டை
தமிழகத்து பாட்டு தமிழ்ப்பேட்டை

மு.வ.வின் மாணவராம் சண்முகம்
முதன்மையான பேராசிரியராம் சண்முகம்
மொழி பெயர்ப்பு உதவி இயக்குநர் சண்முகம்
தமிழ் பண்பாட்டு மைய இயக்குநர் சண்முகம்
பதவிகளுக்கும் பட்டங்களுக்கும் பிடித்தொரு சண்முகம்
எங்கள் உளுந்தூர்ப்பேட்டை டாக்டர் சண்முகம்

பெருங்கவிஞர் சண்முகம்
தெய்வீகக் கவிஞர் சண்முகம்
இசைக் கவியரசு சண்முகம்
பக்த சிகாமணி சண்முகம்
கலை மாமணி சண்முகம்
அருட் செல்வர் சண்முகம்

இவையெல்லாம் கவிதை அடைமொழிகள் அல்ல!
உளுந்தூர்ப்பேட்டை மைந்தனின் உன்னதப் பட்டங்கள்

தமிழுக்கு ஒரு உ.வே.சா. - இசை
மெட்டுக்கு ஒரு **உ.பே.ச.** - இவர்
உளுந்தூர்ப்பேட்டை சண்முகம் - மட்டுமல்ல
உலகம் **பே**சும் **ச**ண்முகம் - உ.பே.ச.

சுப்ரபாதம் தந்தவிருது தங்கத்தகடு
எப்பவும் இசைக்கும் உந்தனது குறுந்தகடு
மக்களின் இதயம் மகிழ்ந்து தங்கும்தகடு.
திக்கெலாம் ஒலிக்கும் தேமதுர தமிழ்த்தகடு.

இத்தகைய மாபெரும் கவிஞரின் பாடல்கள்
சித்தமாய்ப் பதிப்பித்து வெளியிடும் நெய்தல்

செய்ததொரு மாபெரும் பாக்கியம், புண்ணியம்
செய்யவைத்த பெருமை **பிரீத்திகாவைச்** சாரும்.
வாய்ப்பளித்த **சாதகப்பறவை சங்கரைச்** சாரும்.
சேய்போல பாடல்களைச் சேமமுறக் காத்திட்ட
உ.பே.ச. குடும்பம் உன்னதமாய் வாழும்.
இனி பேச வேண்டியதிலை உ.பே.ச பண்பாடும்

இனிய மழலைப் பாட்டு
கனிய இயற்கைப் பாட்டு
பணிய பரமன் பாட்டு
துணிய எழுச்சிப் பாட்டு
உணர காதல் பாட்டு
உயர முன்னேற்றப் பாட்டு
மலர குடும்பப் பாட்டு
வளர அறிவுப் பாட்டு
பற்பல தெய்வப் பாட்டு
அற்புதத் தலைவர் பாட்டு
உருக உள்ளப் பாட்டு
மருகா தெளிவுப் பாட்டு
பன்மொழிப் பெயர்ப்பு பாட்டு
பண்டித வித்தகப் பாட்டு
நிப்பாட்டு - நிப்பாட்டு
என்ன பாட்டு இல்லை.
அனைத்தும் சண்முகம் பாட்டு
அத்தனை பாடலும் தந்ததைப்
பதிப்பித்துத் தந்தது நெய்தல்
தமிழுலகுக்கு உ.பே.ச. வின் தரமிகு பாடல்களை
அமிழ்தாய்ச் சுவைத்திட அன்புடன் வெளியிடுகிறோம்.

பொருளடக்கம்

ஸ்ரீ காஞ்சி காமாட்சி சுப்ரபாதம் 15

காஞ்சி காமாட்சி 29

மாங்காட்டுமயில் 55

முழுநிலவே மூகாம்பிகையே 75

ஸ்ரீ காஞ்சி காமாட்சி
சுப்ரபாதம்

1. ஸ்ரீ காமாட்சி சுப்ரபாதம்

காமாட்சி கண்திற கார்இருள் நீங்கும் நேரம் இதே
பேர்அண்டம் தோன்றிவளரக் காரணம்நீ வரதாம்பிகே
எழுந்தருள் எழுந்தருள் ஈஸ்வரி புவனேஸ்வரி என்அன்னையே
திருவிழி மலர்க எழுகவே மூவுலகும் செழித்தோங்கவே
(1)

ம்ருதங்கம் பேரி படகம் ஆனகம் ஒலிக்கும்
சுருதி வேதியர் வேதகோஷம் அழைக்கும்
பொழுது புலர்ந்தது பறவைகள் பாட்டிசைக்கும்
எழுகவே கௌரி... உடன் எழுந்திரம்மா (2)

சங்குமுழங்கும் எங்கும் சங்கீதம் கேட்டிடும்
தங்க மயிலும் சேவலும் குரல்எழுப்பும்
வந்தது விடிகின்ற வேளை விழிதிறவாய்
சங்கரி நின்தாள் தவ சுப்ரபாதம் (3)

தாயின் முகம்பார்த்து நாணி சந்திரன் ஓடிவிட்டான்
சூரியன் நின்எழில் காண தேரினை முடுக்கிவிட்டான்
ஆய கலைகள் அனைத்தும்உன் கண்திறந்தால் அல்லவோ
பாரில் பரிமளிக்கும் உன் பார்வை எங்கே (4)

பொற்கலசம் ஏந்தியே பூரணகும்பம் காட்டுவார்
பூமாலை சூட்டிட போட்டிமேல் போட்டியிடுவார்
கற்புடை மாதர் இன்னிசை மீட்ட வந்தார்
காஞ்சி காமாட்சியே கண் மலர்க தாயே (5)

துதிப்பாடகர்கள் வாத்யங்கள் கொண்டுவந்தார்
நிதிஉன் சந்நிதி என்றே நினைந்திருந்தார்

இதுநல்ல தருணம் அருள்விழி காட்டிடம்மா
இமவான் குலக்கொடியே எழு எழுந்திரம்மா (6)

முழுநிலா ஒளி என தவறாக மனதில் எண்ணி
பரமேஸ்வரன் இன்னும் படுக்கைவிட் டெழுந்திரானோ
திருமுகம் எம்பக்கம் திருப்பினால் உண்மைபுரியும்
ஜகத்ஜனனி கல்யாணியே திருக்கண் திறம்மா (7)

அர்த்த ராத்தியிலே அந்தப்புரத்தில் அம்மா உந்தன்
பத்மமலர்ப் பாதச் சலங்கைஒலி ஜல்ஜல் என
சித்தம் மகிழ்ந்தநான் தூக்கம் இழந்து இங்கே
நிற்கிறேன் தாயே நின் தோற்றம் எங்கே (8)

ஏடுகள் சரஸ்வதி, தாமரை திருமகள், மேகலை ரம்பைகையில்
தூயநீர் கங்கை, நீலா கண்ணாடி, ஏந்தியே வந்தனர்காண்
தாளங்கள் காளி, நந்தையும் ப்ருந்தாவும் ம்ருதங்கம் தட்டுகின்றார்
ஏனிந்தப் பொய்த்தூக்கம் பள்ளி எழுக நீயே (9)

எழுந்தனன் சிவபிரான் நீராடச் செல்கிறான் எழுந்திரம்மா
தனியாகச் சென்றிட மனமிலை நீதான் துணைவந்திடு
உறங்கியதுபோதும் எழுந்திரு கருணைவிழி காட்டுவாயே
ஓங்காரி தூங்கலாமா துயில் எழுகதாயே (10)

அர்ச்சனை செய்திட புஷ்பங்கள் கொண்டுவந்தார்
முக்கனித் தட்டுகள் பட்டுடை முன்னே வைத்தார்
பக்தியாய் உந்தன் லீலா விநோதம் பகருகின்றார்
சக்தியே எழுந்துவாராய் தவ சுப்ரபாதம் (11)

மன்மதனை வீழ்த்தினான் ஆயினும் ஈசன் உந்தன்
கன்னத்தில் முத்தம்தரவே காத்திருப்பான்
என்னதான் தவம்செய்வானோ அறியோம் தாயே
உன்முகம் காணவேண்டும் வந்து உதவுவாயே (12)

புனித நீராடினார் முனிவர்கள் கங்கை நீரை
தலையிலே சுமந்துமே அபிஷேகம் செய்ய வந்தார்

திருவாசல் திறந்திடு தரிசனம் தருக தாயே
ஸ்ரீ காஞ்சி காமாட்சியே குரு சுப்ரபாதம் (13)

மந்தாரம் குந்தம் ஷண்பகம் ஜாதி மல்லி
சங்குக் கழுத்திற்கு ஆரமாய் சார்த்த வந்தார்
பங்கயக் கண்திற எழுந்திரு யோகியர் பார்த்திருப்பார்
சிங்காரச் சிரிப்பெங்கே தேவி சீக்கிரம் வா (14)

காஞ்சிமேகலை ஒலிக்கும் உடுக்கையாய் இடுப்பு தோன்றும்
காஞ்மீரக்குங்குமப்பூ கலந்த சந்தனம் கழுத்து தோன்றும்
வாஞ்சையாய் ஈஸ்வரன் முத்தாடும் கன்னம் தோன்றும்
வடிவான நாசி தோன்றும் வா வருக அம்மா (15)

விசால புவனங்களையும் வெளியையும் விழிகள் காட்டும்
விரிகின்ற பூமலர்ச் சிரிப்பைநின் இதழ்கள் காட்டும்
அழகெலாம் சங்கமிக்கும் கழுத்தின்முன் கமலம் தோற்கும்
திருவடி சக்ரரேகை பொலிய வருக நீயே (16)

திரிபுரம் எரிந்தது பரமனின் சிரிப்பிலே கணநேரத்தில்
சிவன்சினம் தனித்திடும் சிரிப்புநின் செவ்விதழ்க் கடைஓரத்தில்
கதிரவன் சிரிக்கிறான் காலையம் பொழுதிலே கனிந்திடுவாய்
காஞ்சி காமாட்சியே வா எழுந்து வாராய் (17)

பிள்ளைகள் வாடிட, பெற்றவள் தூங்கிடல் என்ன நியாயம்
எல்லையில் மூவுலகிற்கும் கதிநீ எழுந்திரம்மா
அல்லிலும் பகலிலும் உன்னையே எண்ணினோம் அமுதுதாராய்
செல்வியே ஈஸ்வரி திருக்கண் திறப்பாய் (18)

மதுர மனோஹர மொழிகளைச் சுவைப்பதற்கே
மாயனும் ப்ரம்மனும் நின்முன் ஆவலாய் நின்றிருப்பார்
விழிதிற எழுந்துவா கிளிமொழி பேசிடம்மா
கருணைக்கொரு காமாட்சியே ஸ்ரீலலிதாம்பி ஹே (19)

திசைகளே ஆடையாய் திகம்பர சாமியாய் பித்தேறியே
ப்ரம்மனின் தலையதே கையினில் பிச்சைப் பாத்திரமாய்

தலைவிரி கோலமாய்த் திரிந்தவன் கையைநீ பற்றியதும்
உலகெலாம் வணங்குதே உன் உறக்கம் நீங்கு (20)

திருக்குளத் தருகிலே அழுததோர் பிள்ளையை மடியிருத்தி
முலைப்பால் தந்தனை ஞானத் தோணியில் ஏற்றினை
அருந்திய மிச்சத்தை அடியனும் பருகவே தருகவே
கவிமாரி பொழிந்திடுவேன் கருவிழிகள் காட்டு (21)

தாயின் பாலுண்ட கந்தனும் தந்தை செவியில்
ஓங்கார ப்ரணவ உட்பொருள் உரைக்க லானான்
நாயேன் கடைத்தேற நல்வழி கண்டேனம்மா
கோயில் வாசல் திறந்தால் மனம் குளிரும் அம்மா (22)

காசியில் விஸ்வநாதன் மகிழ கமலக்கண் காட்டுகின்றாய்
மதுரையில் சொக்கநாதன்மேல் அங்கயற்கண் வீசுகின்றாய்
காஞ்சியில் ஏகாம்பரம் ஏங்க காதற்கண் ஏவுகின்றாய்
காப்பது நின்கண்கள்தான் வா எழுந்து வாராய் (23)

ஜகத்குரு ஸ்ரீசந்த்ரசேகர பரமாசார்யர்
சரண கமலம் தரிசிக்க உன்முன் வந்து நின்றார்
உனக்கென ஓரிடம் காமகோடி காயத்ரி மண்டபத்தில்
திருக்காட்சி தந்திடுக திருப்பள்ளி எழுக (24)

காலடி ஞானி ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர்
காஞ்சியில் காமாட்சி தேவி உனைக் கண்டுகொண்டு
ஸ்ரீசக்ரமும் பீடமும் திருக்கோயிற் பணிகளும் செய்தனரே
ஆவலாய் அழைக்கிறோம் வா வருக அம்மா (25)

பாவங்கள் யாவையும் போக்கிடுவாய் பயத்தை நீக்கி
காலனும் எனைக்கண்டு அஞ்சவே காத்து நிற்பாய்
ஞானமும் மோக்ஷமும் நல்கும்நின் அபய வரதம்
காணவேண்டும் தாயே விழித்தெழுக நீயே (26)

நாரா யணனும் ப்ரம்மனும் நமஸ்கரிக்கும்
சீரார்ந்த திருவடியில் தாமரை சங்கு சக்ரம்

ரேகையாய் மின்னிட யோகியர் உள்ளப் பொய்கை
ஆடிடும் அன்னப்பேடே அருள் விழி மலர்வாய் (27)

திருமுகம் பார்த்ததும் சிலிர் சிலிர்த்திடுவார் ஒருபுறம்
தேவிநின் புகழ்பாடி மெய்மறந் தாடுவார் ஒருபுறம்
திருவடியில் விழுந்திடவேண்டித் தவிப்பார் ஒருபுறம்
அனைவர்க்கும் காட்சிகொடுக்கவே நீ எழுந்துவாராய் (28)

மேருவின் உச்சியில் மேனியைக் காண்பவர் கண்டுபோகட்டும்
மாமணித் தீவிலும் மஹேஸ்வரி நின்னழகு நன்கு காணட்டும்
பாற்கடல் நடுவிலும் பார்வதி நின்னைப் பார்த்துப்போகட்டும்
காஞ்சியில் நான் காணவே கண் மலர்க அம்மா (29)

சிவபிரான் இடப்புறம் அமரும் உன் திருமுகம் சந்த்ரபிம்பம்
கருவிழி நீலோற்பலம் இதழ் கனிந்த கோவைப்பழம்
முடிமுதல் அடிவரை சர்வ ஆபரணக் கோலம்
இருவிழி மலர்க தாயே மனம் இரங்கி வாயேன் (30)

வேண்டிய தெலாம்தரும் கற்பக விருட்சம் நீயே
வேகமாய் பொழிந்திடும் பொன்மழை மேகம் நீயே தாயே
சாதகப் பறவைநான் உன்னையே நாடினேன் சரணம் அம்மா
தயை செய்து நீவந்திடு தவ சுப்ர பாதம் (31)

திரிபுர சுந்தரி திரிபுவன சுந்தரி சிவநாயகி
நிறைநுதல் முக்கண்ணி பேரின்ப வாழ்வினைத் தந்தாதரி
அடைக்கலம் என்பவர் படைக்கலம் ஆனது நின்கரும்பே
கொடுத்திடு குங்குமமே என் குலதெய்வமே (32)

தீர்ந்தது துயரம் சேர்ந்தது செல்வம் நின்அருளே
வாய்ந்தது வளமை வாழ்வினில் செழுமை நின்வரமே
காஞ்சியில் வாழும் கற்பூர நாயகி பொற்பதங்கள்
சார்ந்தனன் சரணம் தவசுப்ர பாதம் (33)

பலன் :-

கேட்பவர்க் கெல்லாம் கீர்த்தியைத் தந்திடும் சுப்ரபாதம்
பாட்டினால் நின்னைப் போற்றினால் கிட்டும்நற் பலன்கள்யாவும்

நாள்தொறும் காலையில் தேவியின் புகழினைப் பாடவேண்டும்
காஞ்சி காமாட்சியே குரு சுப்ரபாதம் (34)

கால்சிலம் போசைஎனை வாஎன் றழைக்குதே
கைவளைக ளும் ஒலிக்குதே
கோயிலுள் நுழைந்ததும் ஆயிரம் சூர்யஒளி
கூடியே வரவேற்குதே
தேவிநின் சந்நிதி தேடியே வருவதற்குள்
திசையெலாம் தடுமாறுதே
காமாட்சி அம்மாஉன் கருணைவிழி கண்டதும்என்
கண்கள் குளமாகுதே (1)

முழுநிலவு ஒருகோடி திருமுகம் ஆனதோ
முத்துமழைதான் கொட்டுதோ
இருவிழிகள் எனும்அமுத பெருங்கடலில் நான்நீந்தி
விளையாட வரம் கிட்டுதோ
புருவமெனும் இருதனுசு நெற்றிக்கண் அம்பெய்த
கரும்புவில் மலர்எதற்கோ
விரும்பியது உனையென்ற நிலைவந்த பின்னாலே
மன்மதனை எரிப்பதற்கோ (2)

அகந்தையினை பறித்தெடுத்த அடையாளம் காட்டவோ
செங்கழுநீர் மலர்ஏந்தினாய்
சிவந்தநிறக் கச்சணிந்த திருமார்பில் ரத்தினங்கள்
புரண்டிடவே உருக்காட்டினாய்
பவளஇதழ் மேடையிலே நெடுநாசிப் புல்லாக்கு
சதிராட எனைநோக்கினாய்
திருக்காஞ்சி புரத்தழகி காமாட்சி அம்மாஉன்
திருவடிகள் சரணரடைந்தேன் (3)

நீங்காத ஆனந்த ஓங்கார ஒலிகேட்கும்
செவிகளதன் வடிவமாகும
காதோரம் குழலாடும் கார்கூந்தல் அலைஆடும்
கன்னத்தில் மின்னலாடும்
வானமெனும் கடலினிலே வந்ததொரு வலம்புரியோ
வண்ணக் கழுத்து ஆகும்

வைர, வைடூரியம் கோமேதகம் ராகம்
மரகதமும் அங்கு கூடும் (4)

தோள்பாரம் தாங்காமல் தளர்கின்ற கொடியிடைக்கு
ஒட்டியாணம் கட்டினாய்
மேகலைகள் அசைகின்ற தொடைகளை மடக்கியே
பத்மாசனம் காட்டினாய்
கோலமிகு சேலையதன் விசிறி மடிப்பழகு
கோலாகலக் கோலமே
நீவேறு நான்வேறு என்ற நிலை மாற்றிடுதே
தாயுன் சந்நிதானமே (5)

கிளியோடு பேசியே பழகியஉன் செவ்விதழ்கள்
மொழிவதும் கிளிமொழியே
கதம்பமலர் வடிக்கின்ற செந்தேனைப் பருகியே
சிவந்ததோ கருவிழியோ
நிதம்உன்னை துதிக்கின்ற பக்தர்களின் வாழ்வுக்கு
வளம்அருள் பார்வதியே
சிவம் என்று சொன்னாலே மங்களம் சேருமே
அவன்போற்றும் காதலியே (6)

கந்தர்வ நங்கையர்கள் ஸித்த ஸாரணியர்கள்
தேவமங்கையர் வாழ்த்தவே
வெண்கொற்றக் குடையின் கீழ் சிம்மாசனம் அமரும்
சுந்தரி சிவசங்கரி
சந்தனம் குங்குமம் ஜவ்வாது கஸ்தூரி
சாந்தணிந்த திருமார்பிலே
தொங்குகிற மாங்கல்யம் தால்ாட்டும் ஊஞ்சலாய்
தோன்றுதே காமாட்சியே (7)

நான்முகன் மணிமுடியும் மாலவன் க்ரீடமும்
கால்தாங்கும் பீடங்களோ
வேதவே தாந்தமொடு ஆகம சாஸ்திரம்
ஆலய மாடங்களோ
யாகங்கள் வளர்க்கின்ற யோகியர் ஞானியர்
வாயிலின் தீபங்களோ

வாணியின் ஜபமாலை ஸ்ரீதேவி பூமாலை
ஏற்றிடும் காமாட்சியே (8)

தங்கநிற மேனிக்கு மஞ்சள்நிறப் பட்டாடை
அந்திவா னத்தின் ஒளி
சகலஜஸ் வர்யமும் பெறுகின்ற நற்காலம்
வந்ததெனக் கூறும் விழி
எங்கேஉன் தோற்றமோ எங்கேதான் முடியுமோ
அம்மாஉன் விஸ்வரூபம்
அங்கிங் கெனாதபடி எங்கும்பர் ஹாஸமே
ஆனந்த காமாட்சியே (9)

மக்கட்கு வந்துற்ற குறையெலாம் தீர்த்திட
மாமர நிழலமர்ந்தாய்
சக்ரங்கள் ஆறிலும் சகஸ்ரா ரத்திலும்
சக்தியாய் வீற்றிருந்தாய்
திக்கற்ற பேருக்கு திருப்பாதம் சாட்சியாய்
பக்கத்தில் வைத்துக்கொண்டாய்
தேவி உனக்குநிகர் நீயே ஜெகன்மாதா
ஏகாந்த காமாட்சியே (10)

ஸ்ரீவித்யா ரூபினி சர்வலோக ஜனனி
ஸ்ரீசக்ர தேவி கௌரி
ராஜ ராஜேஸ்வரி திரிபுர சுந்தரி
நவசக்தி ஆனவள் நீ
காஞ்சி புரத்திலே வந்துன்னை வணங்குவார்
கவலைக்கு மருந்துநீயே
அஞ்சன காமாட்சி பங்காரு காமாட்சி
அறிந்தார்க்கு விருந்து நீயே (11)

காயாம் பூ நிற மேனியளே
கவியாகஎன் வாக்கினில் வருபவளே
தீரா வறுமை தனை தீர்ப்பவளே
காமாட்சிநின் தாமரைத்தாள் சரணம் (1)

கம்பா நதியின் கரை உன் விரதம்
அன்பும் அறமும் சொலும் பொன்சரிதம்
கந்தா எனமைந்தனை தழுவும்நலம்
காமாட்சி நின்தாமரைத் தாள் சரணம் (2)

பரமன் இடபாகத்தில் அமர்ந்த திறம்
பாசாங்குசம் அம்புவில் கொண்ட கரம்
அநங்கன் உயிர்காத்தருள் அபய வரம்
காமாட்சிநின் தாமரைத்தாள் சரணம் (3)

இந்த்ராதியர் போற்றிடும் சங்கரியே
இமவான் பெற்ற பர்வத வர்த்தினியே
ஸ்ரீசக்கர பீடத்தில் நிற்பவளே
காமாட்சிநின் தாமரைத் தாள் சரணம் (4)

அளவற்றதோர் ஜோதி சுயம்பு ஒளி
அருளுக்கோர் இலக்கணம் கருணைவிழி
திருமாலவன் நான்முகன் வணங்கும்பதம்
காமாட்சிநின் தாமரைத் தாள் சரணம் (5)

துர்த்தேவைகள்தனை ஓட்டிடுவாய்
நல் யோகியர் த்யானத்தில் தோன்றிடுவாய்
சுப மங்களம் வாரி வழங்கிடுவாய்
காமாட்சிநின் தாமரைத் தாள் சரணம் (6)

உனைப் போலொரு தெய்வத்தைக் கண்டறியேன்
உளக் கோயிலில் உன்னையே வழிபடுவேன்
திருக் காஞ்சியின் தெய்வமே ஸ்ரீலலிதே
காமாட்சிநின் தாமரைத் தாள் சரணம் (7)

2. ஸ்ரீ காமாட்சி அம்மன் மங்களம்

ஸ்ரீசக்ரம் போன்றதோர் திருநகர் காஞ்சியில்
ஸ்ரீலலிதை அமர்ந்தாள் ஸ்ரீகாமாட்சித் தாய்க்கு மங்களம் (1)

சுற்றிலும் கோயில்கள் சூழ அதன் நடுவே
வெற்றிமகள் வீற்றிருப்பாள் ஸ்ரீகாமாட்சித் தாய்க்கு மங்களம் (2)

தான்தான் தெய்வத்திற்கெலாம் தெய்வமெனக் காட்ட
ஏகாந்தக் கோலத்தாள் ஸ்ரீகாமாட்சித் தாய்க்கு மங்களம் (3)

காயத்ரி மந்திரப் பொருள்தான் தான்எனக் காட்ட
காயத்ரி மண்டபம் அமர்ந்தாள் ஸ்ரீகாமாட்சித் தாய்க்கு மங்களம் (4)

பஞ்சாக்னி மத்தியில் பரமனை நோக்கித் தவமிருந்தாள்
சங்கரி பார்வதி கௌரி ஸ்ரீகாமாட்சித் தாய்க்கு மங்களம் (5)

சருகும் புசியாமல் உருகிக் கரைந்து தவமிருந்தாள்
இமவான் திருமகள் எங்கள் ஸ்ரீகாமாட்சித் தாய்க்கு மங்களம் (6)

முப்பத்திரண்டு அறம்செழிக்க முறையாய்த் தவமிருந்தாள்
கற்புடைத்தெய்வம் எங்கள் ஸ்ரீகாமாட்சித் தாய்க்கு மங்களம் (7)

நாளும் படியளப்பேன் நானெனச் சொல்லி இருநாழிநெல்
வேளாளர்க்குத் தந்தநங்கை ஸ்ரீகாமாட்சித் தாய்க்கு மங்களம் (8)

மன்மதன்போல் கரும்புவில் மலர்ப்பாணம் ஏந்திநம்மை
தன்பால் இழுக்கும் திறம்கொண்டாள் ஸ்ரீகாமாட்சித்தாய்க்கு மங்களம் (9)

அபயவரம் காட்டாமல் அங்குசபாசம் ஏந்தித்தன்
இருவிழியால் எல்லாம்தர வல்லாள் ஸ்ரீகாமாட்சித்தாய்க்கு
மங்களம் (10)

கண்ணின் கடைக்கோடியால் எண்ணம் கோடி எனினும் நிறைவேற்றி
தன்னையே எண்ணும்படிக்கு வைப்பாள் ஸ்ரீகாமாட்சித் தாய்க்கு
மங்களம் (11)

அவள்விருப்பம் நம்விருப்பமென மனத்தை மாற்றி
முடிவான காமகோடியாய் முன்நிற்பாள் ஸ்ரீகாமாட்சித் தாய்க்கு
மங்களம் (12)

ஆதிசங்கரர் பீடம் அமைத்து வழிவழி பூஜை செயவைத்தாள்
ஜோதிஸ்வரூபின் உமாதேவி ஸ்ரீகாமாட்சித் தாய்க்கு மங்களம்
(13)

மங்களம் அனைத்தும் தரவல்லாள் ஆதிபராசக்தி
தன்பதம் தந்தாள் இனிஏதுபயம் ஸ்ரீகாமாட்சித் தாய்க்கு மங்களம்
(14)

மங்களம் சுபமங்களம்
மங்களம் சுபமங்களம்

காஞ்சி காமாட்சி

3. காஞ்சி காமாட்சி
காமகோடி பீடம்

காமாட்சி - காஞ்சி - காமாட்சி
காம கோடி பீடம் கண்ட
(காமாட்சி)

கரும்புவில் மலர்க்கணை அங்குச பாசம்
கருணை விழிகளில் ததும்பிடும் நேசம்
(காமாட்சி)

சந்திரப் பிறையை தலையில் அணிந்தாய்
சங்கரர் தோத்திரம் கேட்டு மகிழ்ந்தாய்
மந்திரப் புன்னகை சுந்தரக் கோலம்
சந்தன மாக நெஞ்சில் மணந்தாய்
(காமாட்சி)

4. தாலாட்டிடு

காமாட்சித் தாயே காமாட்சித்தாயே
கருணை மழையே முழுமதி ஒளியே
சீராட்டித் தாலாட்டிடு - ஞான
பாலூட்டிப் பாராட்டிடு (காமாட்சித்தாயே)

காயத்ரி தேவி மண்டப மானாள்
பாதம் காணும் பாக்கியம் பெற்றாள்
வாணி வீணை மீட்டுகின் றாளே
திருவும் அருவாய் திகழ்கின்றாளே
தேனாக தித்திக்கும் கரும்பை ஏந்தினாள்
நான்தானே கரும்பென்று கண்காட்டினாள்
ஆசைகளை அங்குசத்தால் அடக்குவேன் என்பாள்
பாசத்தை என்னிடத்தில் பதித்திடு என்பாள்
(காமாட்சித்தாயே)

சங்கரர் போற்றும் சிந்தா மணியே
சந்த்ர சேகர தபசியின் கனியே
தமிழ்போல் சுவைக்கும் அமிழ்தே அழகே
கிளிபோல் பழகும் எளியோய் நீயே
காஞ்சிக்கு வா என்று கை ஆட்டினாய்
வாஞ்சைக்குத் தாய் என்று அமுதூட்டினாய்
ஸ்ரீ மாதா ஜெகன்மாதா எனைத் தேற்றினாய்
தெய்வீக மணிபீடம் தனில் ஏற்றினாய்
(காமாட்சித்தாயே)

5. ஸ்ரீ காஞ்சி காமாட்சி அன்னபூரணி

அறம் வளர்க்கும் செல்வி அன்ன பூரணி
உலகம் சுழல்வதற்கு நீயே காரணி (அறம் வளர்க்கும்)

திரிபுர சுந்தரி ஸ்ரீ சக்ர நாயகி
ஸ்ரீ லலிதே தேவி சண்பகப் பைங்கிளி (அறம் வளர்க்கும்)

பாசம், அங்குசம், கரும்புவில், மலர்க்கணை
பத்மாசனக் கோலம் யாரோ உனக்கிணை
மால், அரன், ப்ரம்மனை படைத்துத் தந்தனை
மஹாலக்ஷ்மி, வாணியை கண்களாய்க் கொண்டனை
(அறம் வளர்க்கும்)

காஞ்சி என்றதும் காமாட்சி காட்சியே
கடுந்தவம் நோன்பிற்கு தாய்நீ சாட்சியே
ஸ்தூலம், சூட்சுமம், காரண வடிவினை
ஞானமும், செல்வமும், நல்கிட வந்தனை
(அறம் வளர்க்கும்)

6. காஞ்சி காமாட்சி அருள் ஆட்சி

காயத்ரி மண்டபத்தில் காமாட்சி
ராஜரா ஜேஸ்வரியின் அருள்ஆட்சி
பத்மா ஸனத்தினிலே திருக்காட்சி
பாவ புண்ணியங்கள் அவள் சாட்சி (காயத்ரி)

கோயில் நிறைந்த காஞ்சியிலே
தாயாய் விளங்கும் தயாபரியே
ஏழு முக்தி தலங்களிலே
இதயத் தடத்தினில் இருப்பவளே (காயத்ரி)

ஆதி சங்கரர் பீடத்திலே
அறம் வளர்த்திடும் நாயகியே
ஸ்தூலம் சூட்சுமம் காரணமாம்
மூவகை வடிவமும் பார்வதியே

கலைமகள் திருமகள் இருவரையும்
கண்க ளாக கொண்டவளே
கடைக்கண் பார்வை அருள் மழையால்
அடைக்கலம் தந்திட அமர்ந்தவளே (காயத்ரி)

7. கேசாதிபாத வருணனை

விருத்தம்:

கரும்புவில் ஏந்தியே கலைவளர்க்கும் தேவியே
காஞ்சிபுரக் கோட்டம் காக்கின்ற கௌரியே
சங்கரர் த்யானத்தில் தவழ்கின்ற ஜோதியே
ஸ்ரீசக்ர நடுவிலே சுழல்கின்ற சக்தியே

பாடல்:

இந்த்ர நீல மணி ஒளி சிந்தும் மேனி
கண்கள் பாற்கடல் தந்த சிந்தாமணி
சந்த்ரப் பிறை, கூந்தல் தவழும் வைர மணி
மரகத வனத்திலே வளரும் வைடூர்ய மணி

குங்குமத் திலகம் எனும் கோமேதக அக்கினி
மாங்களங்கள் தரும் கன்னங்கள் மாதுளங்கனி
சிங்காரச் செவிகளோ ஓங்காரத் த்வனி
சண்பக மலர் நாசி சங்கரி எங்கள் மனோன்மணி -
காஞ்சி காமாட்சி நீ (இந்த்ர)

புருவம் வானவில்லோ பொன்வண்டுக் கூட்டமோ
விரிநெற்றி சுடர் ஒளி மாணிக்கத் தோட்டமோ
பவள இதழ் திறந்தால் புஷ்ப ராகமோ
முத்துக்கள் சிதறுகின்ற மோகனக் கூடமோ
மோகனக் கூடமோ

முப்புரிச் சங்குதான் கழுத்தாய் முதிர்ந்ததோ
கற்பகம் காமதேனு கரங்களாய் அமைந்ததோ
நட்சத்ரக் கூட்டம் தோள் வரிசை என்பதோ
சித்திரத் திருமார்பில் ஜெகம் யாவும் சுழலுதோ (இந்த்ர)

தாயின் மணி வயிறு தமிழ் மூன்றும் தந்ததோ
யாவும் பொய்யென்றே நூலிடை சொல்லுதோ
கால்கள் மடித்தகோலம் யோகநிலைகாட்டுதோ
பாதச் சிலம்போசை யாழிசை மீட்டுதோ (இந்த்ர)

கச்சி எனப்பெறும் காஞ்சி நகரிலே
சக்திநின் திருக்காட்சி சத்தியத்தின் மாட்சியோ
சித்தத்தில் அமுதாகத் தித்திக்கும் செல்வியே
நித்தமும் அற்புதங்கள் நிகழ்த்துகின்ற தேவியே
(இந்த்ர)



8. திருக்கோலம் கேசாதி பாதம்

தாழம் பூவின் வாசம் வீசும் கூந்தல் கருமேகம்
நீல வானின்நிலவும் கதிரும் சுட்டி அலங்காரம்
கோளம் யாவும் சுழலும் கோலம் குங்குமத் திலகம்
ஞான மாளிகை அன்னை நெற்றி யோக தவபீடம்
மோன சாம்ராஜ்யம்
(தாழம்பூ)

பாதி சுற்று சுழன்று வந்தால் மீதி அவள் புருவம்
பக்கம் வாஎன சிறகை விரித்தே இமைகள் அழைப்புவிடும்
ஆதி சக்தியின் நீல விழிகள் ஏழு கடலாகும்
அதனைக் கடக்க உதவும் துடுப்பு நாசி எனலாம்
பாசக் கனலாகும்.
(தாழம்பூ)

பவளச் செடியில் முத்து விளையும் இதழின் கடை ஓரம்
பழங்கள் மூன்றும் பிழிந்து சாறு கன்னல் அவள் கன்னம்
பிரணவம் அதன் வடிவம் செவிகள் வலம்புரி கழுத்து
வதனம் நோக்க கலைந்த தம்மா ப்ரம்மனின் எழுத்து
பிறவியின் முடிச்சு
(தாழம்பூ)

காமன் கரும்புவில் புஷ்ப பாணம் கௌரி கரங்களிலே
வாங்கிக் கொண்டதும் தாங்கிக் கொண்டதும் நம்மைக் காப்பதற்கே
பாசம் தன்னிடம் கொள்க என்றே வலையை வீசுகிறாள்
மாயைப் பேயை ஓட்டும் அங்குசம் கண்ணால் பேசுகிறாள்
கண்ணால் பேசுகிறாள்

நான்கு கரங்கள் நான்கு வேதம் தோள்களே சார்பு
நவமணிகளும் கொலு அமர்ந்தன தாயின் திருமார்பு
மூன்று தமிழும் வயிற்றின் மடிப்போ நாபி உயிர்த்துடிப்போ
காஞ்சி மேகலை மணியின் ஒலிகள் காலத்தின் அழைப்போ

லலிதை என்னும் பெயரின் பொருளை நளினத் தொடை காட்டும்
ஐரா வதத்தின் துதிக்கை வனப்பை கால்கள் நிலை நாட்டும்
பாத பங்கஜத் தேனை அருந்த சிலம்பு வண்டொலிக்கும்
பார்க்கப் பார்க்க நெஞ்சம் உருகும் த்யானத்தில் லயிக்கும்
த்யானத்தில் லயிக்கும்



9. குளிரக் குளிர

குளிரக் குளிர தரிசனம் தரும் கோமள வல்லி - அவள்
அழகைப் பருக வருக காஞ்சி புகழினைச் சொல்லி
(குளிரக்குளிர)

மறுகாலை மாற்றாமல் ஒரு காலில் நின்றிருந்தாள்
சருகும் புசியாமல் தனிநோன்புத் தவமிருந்தாள்
வேகவதி ஆற்றினிலே வெள்ளம்வர பார்வதியாள்
ஆதி சிவனவனை நெஞ்சாரத் தழுவிக் கொண்டாள்
கலைமகள், திருமகளை கண்களில் வைத்துக்கொண்டாள்
காயத்ரி மண்டபத்தில் காமாட்சி காட்சி தந்தாள்
காயத்ரி மண்டபத்தில் காமாட்சி காட்சி தந்தாள்
(குளிரக்குளிர)

பந்தன், பண்டன் எனும் அரக்கரை அழிக்க வந்தாள்
சண்பக மரத்தினிலே கிளியாய் அமர்ந்திருந்தாள்
தஞ்சம் என்றவரின் நெஞ்சில் இடம்பிடித்தாள்
சங்கரர் அமைத்து வைத்த சக்கரம் வீற்றிருந்தாள்
கரும்புவில் மலர் தொடுத்தாள் விரும்பியதைக் கொடுத்தாள்
காயத்ரி மண்டபத்தில் காமாட்சி காட்சி தந்தாள்
காயத்ரி மண்டபத்தில் காமாட்சி காட்சி தந்தாள்
(குளிரக்குளிர)

10. கண்களில் காமாட்சி

தேனாகத் தித்திக்கும் கரும்புவில் எடுப்பவள்
ஆனந்த சௌபாக்ய அம்பினைத் தொடுப்பவள்
காலைக் கதிரவன் ஒளிசிந்தும் மேனியள்
கருணையே வடிவான காமாட்சித் தாயவள்
(தேனாக)

ஸ்ரீ சக்ர நகரமாம் காஞ்சியில் அமர்ந்தவள்
சிவனுடன் சேரவே கடுந்தவம் புரிந்தவள்
ஞான சரஸ்வதி வீணையில் லயிப்பவள்
அரூப லக்ஷ்மியொடு ஐஸ்வர்யம் கொடுப்பவள்
(தேனாக)

வாராஹி ஸ்யாமளா வணங்கிட வந்தவள்
வேண்டியதைத் தரும் விருப்பத்தைக் கொண்டவள்
ஆதி சங்கரர்க்கு பீடம் அமைத்தவள்
காஞ்சிமா முனிவரின் கண்களில் தெரிபவள்
(தேனாக)

11. கைகொடுக்கும் காமாட்சி

செம்பொன்னிறம் அவள் திருமேனி - தன்னைத்
தேடிவரு வோர்க்குச் சிந்தாமணி - நல்ல
(செம்பொன்னிறம்)

சங்கரன் பூஜைசெய்த தணிமாமணி - ஆதி
சங்கரன் பூஜை செய்த தணிமாமணி
(செம்பொன்னிறம்)

சிந்தூரத் திலகமிட்டாள் சிவநாயகி - புன்
சிரிப்பினில் முத்துதிர்ப்பாள் உமாபார்வதி
சந்திரப் பிறைமுடித்தாள் தவசீலினி - தன்
அன்பரின் குறைமுடிப்பாள் அன்னபூரணி - நல்ல
(செம்பொன்னிறம்)

நல்லறம் காப்பதற்குக் காஞ்சியிலே - நடு
நாயகமாய் விளங்கும் தாயவளே
சொல்லினில் தேன் சிந்தும் கவிகொடுப்பாள் - நாம்
துவண்டு விழும்போது கைகொடுப்பாள் - நல்ல
(செம்பொன்னிறம்)

12. அவள் செய்த தவம்

அவள் செய்த தவத்திற்கு ஈடேதம்மா
அவள் செய்த ஜபத்திற்கு இணையேதம்மா
அக்னி குண்டம் அமைத்து
தீமேல் கால் வைத்து
அவனையே நினைத்து
அவன் நாமமே துதித்து (அவள் செய்த)

சிவனின் ஆணைக்குத் தலை பணிந்தாள்
திருக்காஞ்சி புரத்தினையே தேர்ந்தெடுத்தாள்
மணலில் லிங்கம் வடித்து வைத்தாள்
மனதில் ஈசனை பிடித்து வைத்தாள்
வேகவதி ஆற்றில்
வெள்ளம் வரப்பார்த்து
பார்வதி இவள் ஓடி
பற்றி கொண்டாள் நாடி (அவள் செய்த)

கருணைக்கு மறுபெயர்தான் காமாட்சி
கற்பூர தீபத்தில் அவள் காட்சி
ஒரு முறை அவளைப் பார்த்து விட்டால்
உள்ளத்தில் அவளைச் சேர்த்து விட்டால்
மறுபிறவி இல்லை
மரணபயம் இல்லை
திருவடிகள் இல்லை
ஆனந்தத்தின் எல்லை (அவள் செய்த)

13. சக்தியின் தவம்

தாம் அக்நிவர்ணாம் தபஸா ஜ்வலந்தீம்
வைரோஸநீம் கர்மபலேஷு ஜுஷ்டாம்
துர்காந்தேவிஹும் சரணமஹம் ப்ரபத்யே
ஸுதர ஸிதரஸே நமஹ

காமன் சம்ஹாரம் ஆனபின்
யாவும் தகனமாய் போனபின்
மீண்டும் ஸ்ருஷ்டி தோன்றிட
மெல்லச் சிரித்தாள் சக்தியே

காளியின் நர்த்தனம் தொடங்குது
கரும்புவில் அவள்கையில் விளங்குது
பூமிக்கு வந்திட யோசனை
காஞ்சி புரம் அவள் வாஸமே

அக்கினி குண்டம் எரியுது
ஐந்து கிளைகளாய் பிரியுது
அன்னையைச் சுற்றி வருகுது
ஆவேசக் கனலோ பெருகுது

சருகைக் கூட தொடவில்லை
ஒரு வாய் நீரும் பருகவில்லை
வலக்கால் நாபியில் வைத்தனள்
இடக்கால் பெருவிரல் ஊற்றினாள்

இதயத்தில் ஒருகை குவியுது
தலைமேல் மறுகை மலருது

ஜபமாலை தானாய் உருளுது

முக்கண் அக்கினி வளருது

அவள் செய்த தவத்திற்கு ஈடில்லை

அவள் செய்த ஜபத்திற்கு இணையில்லை

கருணை வெள்ளமாய் விரைகுது

காமாட்சி உள்ளம் கரையுது

சிவமும் சக்தியும் சேருது

தீரா வினையும் தீருது

உயிரும் உணர்வும் குளிருது

தவத்தால் கிடைத்த பயனிது

சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்



14. சரணடைதல்

உன் பாதங்கள் சாட்சி
என் மனசாட்சி
என்றும் உன் திருக்காட்சி
என்றும்உன் திருக்காட்சி
காருண்ய நீட்சி
காஞ்சி காமாட்சி
காப்பதுன் அரசாட்சி - அம்மா (உன் பாதங்கள்)

வாய்த்தாம் பூலம்
வழங்கி ஓர் ஊமையை
மாகவி ஆக்கிய தாயன்றோ - அவன்
மூக பஞ்ச சதி
காவியம் இயற்றியே
பேர்பெறச் செய்ததும் நீயன்றோ - அம்மா - அம்மா
(உன் பாதங்கள்)

மான்விழி மீன் விழி தாமரை குவளை
நீலக் கடல், ஓடை குளிர் அருவி
காலைப் பொழுது புலருமுன் வானம்
தீ, நீர், காற்று நின் விழி அழகு
மாதங்கி என்னும் அங்கயற் கண்ணி
மதுரை மீனாட்சி நீ தானே
பார்வையா லேயே ஞானப்பால் வார்க்கும்
காசி விசாலாட்சி நீ தானே

முடுகு :

நின் கடைக் கண்கள்
குங்குமக் கதிர்கள்
நினைத்ததைக் கொடுக்கும் கற்பகமே
கல்வியும் செல்வமும்
தளரா உள்ளமும்
நல்லன யாவும் தந்திடுமே
பெண்மையும் தாய்மையும்
பெருமையும் உரிமையும்
உண்மையும் உலவிடும் உன்னிடமே
கண்மணி கலைமணி
காஞ்சித் தெய்வமே
காமாட்சித் தாயே அடைக்கலமே (உன் பாதங்கள்)

15. வரலாறு

கண்ணா மூச்சி விளையாட் டில்ஒரு
காவியம் பிறந்தது
காமாட்சி செய்த லீலா விநோதம்
தர்மம் செழித்தது - நம்
தாகம் தீர்ந்தது (கண்ணா மூச்சி)

பின்னாலே நின்று கண்ணைப் பொத்தவே
பிணக்கு வந்தது - சிவன்
முன்னாலே நிற்காதே போ என்று சொன்னதால்
பூமி பிழைத்தது - சிவ
காமியை அழைத்தது (கண்ணா மூச்சி)

வேதங்கள் நான்கும் மாமர மாகி
தேவிக்கு நிழல் கொடுக்க
ஈரமண்ணிலே லிங்கம் பிடித்தவள்
ஈசனை வேண்டி நிற்க
சோதனை செய்யவே ஈஸ்வரன் பல நாள்
பேசாமல் வீற்றிருக்க
ஏதும் உண்ணாமல் தீயை வளர்த்தே
காளி தவமிருக்க

கம்பா நதியிலே வெள்ளம் வர - அதைக்
கண்டவள் கண்ணிலே வெள்ளம் வர
லிங்கத்தைக் கட்டி அவள் அணைக்க - அவன்
சாப விமோசனம் தந்து நிற்க - இனி
இங்கேயே தானே இருப்பேன் என்று - அவள்
இரண்டு நாழி நெல் கேட்க - அவன்
சந்தோஷத் துடனே சம்மதிக்க - இனி
என்றென்றும் இன்பமாய் நாமிருக்க (கண்ணா மூச்சி)

16. திருப்பள்ளி எழுச்சி

அம்மா காமாட்சி ஆலய மணியோசை
இன்னமுமா நின் செவிக்கு எட்டவில்லை?
ஆதார சக்தி உன் பாதாரம் சேவிக்க
ஆனந்த அருள்மழை ஏன் கொட்டவில்லை? (அம்மா)

கீழ்திசை வானத்தில் பூத்தது செங்கதிர்
வாழ்த்திட வந்தனள் காயத்ரி
பார்த்திடக் கண்ணாடி காட்டினள் நீலா தேவி
படுக்கை விட் டெழுந்திரு ஸ்ரீ கௌரி (அம்மா)

ஏடு படித்திடும் வாணி எதிர் வந்தாள்
தாமரை ஏந்தினாள் தனலக்ஷ்மி
நீராட் டிடவே கங்கையும் நின்றனள்
பீதாம்பரம் தந்தாள் எழில் ரம்பை
காளியும் ப்ருந்தையும் தாள மேளம் இசைப்பார்
தேவர்கள் காத்து ளார் வாசலில்
யோகியரும் உன்னைத் தேடுகின்றார் தாயே
நேரினில் கண்டிடும் ஆவலில் (அம்மா)

நின்முகம் நிலவென்று நினைவிழந்து உறங்கும்
சங்கரன் தன்னையும் எழுப்பிடுக
நீலத் தாமரை விழிகளின் வீச்சிலே

கோளங்கள் யாவையும் சுழற்றிடுக
மின்னலிடை அசைய பொன்னடி சிலம்பதிர
புன்னகை காட்டி புறப்படுக
கண்மணி காமாட்சி திருப்பள்ளி எழுச்சி
சகல சௌபாக்கியம் அளித்திடுக

17. அறம் வளர்க்கும் நாயகி

கோடி கோடியாய் கொட்டித் தருவாள் - நாம்
நாடியதெல்லாம் நடத்தி வைப்பாள்
தேடியதெல்லாம் சேர்த்து வைப்பாள்
தீவினை யாவும் தடுத்திருப்பாள்
அவள் தான் காமகோடி
அருள் அமுதம் நாடி
வருவார் பலர் தேடி
வாயாரப் படி

காமாட்சி - அன்னை - காமாட்சி
காமாட்சி - காஞ்சி - காமாட்சி (கோடி கோடியாய்)

காஞ்சிபுரத்தை தேர்ந்தெடுத்தாள் - நல்ல
கலை வளர்ந்தாள் உயர்நிலை கொடுத்தாள்
அதி சங்கரரை அருகழைத்தாள் - அங்கே
ஆசார்ய பீடத்தை அமைக்கச் செய்தாள்
அவள்தான் காமகோடி - அன்னை காம கோடி
அருள் அமுதம் நாடி
வருவார் பலர் தேடி
வாயாரப் பாடி

காமாட்சி - அன்னை - காமாட்சி
காமாட்சி - காஞ்சி - காமாட்சி (கோடி கோடியாய்)

சுற்றியும் கோயில்கள் சூழ்ந்திருக்க - பரா
சக்தி தான் மட்டும் தனித்திருந்தாள்
சத்திய விரத க்ஷேத்திரமாய் - தன்
முத்திரை பதித்து காத்திருந்தாள்

முப்த்திரண்டு அறங்கள் செழிக்க
உத்தம பத்தினி தவம் இருந்தாள்
எட்டுத் திக்கிலும் தன் பேர் விளங்க
எல்லா நலங்களும் வழங்குகிறாள் (கோடி கோடியாய்)

18. திருக்கோயில்

தாய் உன்னைக் காண்பதற்கு ஓடோடி வந்தேனே
நீ வாழும் பூமியினை கண்ணில் ஒற்றிக் கொண்டேனே
ஆலயங்கள் மலிந்திருக்கும் வீதிஎழில் கண்டேனே
காமாட்சி அம்மாஉன் கலைமாடம் அடைந்தேனே
(தாய் உன்னை)

கோயிலுக்குள் நுழைந்தேனா பால் மழையில் நனைந்தேனா
பூப்பூத்த நந்தவனம் மகரந்தம் முகர்ந்தேனா
ஏகாந்த மான உந்தன் எதிரில் வருவதற்குள்
இந்தவழி அந்தவழி என மயங்கி நின்றேன் நான்
(தாய் உன்னை)

தாமரை இதழ் சூழ்ந்த பூவட்டம் ஸ்ரீ நகரம்
காஞ்சி புரத் தோற்றம் ப்ரபஞ்சத் திருவடிவம்
ஸ்ரீ சக்ர நடுப்புள்ளி சிவசக்தி சம்மேளனம்
மேருஉச்சி அடைவதற்கு நீண்ட நெடும் பயணம்
(தாய் உன்னை)

பிறவிச் சுழல் வட்டம் அதை விட்டு உன் நாட்டம்
தொடர்பவரே அடைவார் அன்னை நின் காமகோட்டம்
விரும்பிய தை எல்லாம் தருவதுன் விழிக்கோணம்
விருப்பம் உன்னிடத்தில் வைத்தால் தான் அது கூடும்
(தாய் உன்னை)

ஆதி சங்கரர் அமர்ந்த அழகுத் திருக்கோலம்
நேரே துர்வாஸ முனிவரின் தவக்கூடம்
காயத்ரி மந்திரத்தின் மண்டபமே ஆதாரம்
நீ இருக்கும் சந்நிதிக்கும் வருகின்ற வழி மூலம்
(தாய் உன்னை)

19. போற்றி

அறங்கள் வளர்க்கும் அம்பிகையே உன்
அரவிந்தப் பதம் போற்றி
ஆயிரம் ஆயிரம் சூரிய ஜோதி
அருள் ஒளி முகம் போற்றி
அங்குச பாசம் கரும்புவில் மலர்க்கணை
அழகுக் கரம் போற்றி
சந்திரப் பிறையை முழுமதி ஆக்கும்
தாயின் சிரம் போற்றி

சிவனுடன் சேர்ந்து அர்த்த நாரியாய்
திகழ்பவளே போற்றி
ஸ்ரீ சக்ர நடுவில் நாத பிந்துவாய்
சிரிப்பவளே போற்றி
கலைமகள் திருமகள் இருவரும் இருவிழி
மலைமகளே போற்றி
சுயம்புவாய் காஞ்சியில் பிலத்தில் அமர்ந்த
சுந்தரியே போற்றி

பண்டனை அழித்த பைரவி போற்றி
சண்பக மரத்துப் பைங்கிளி போற்றி
முக்தித் தலத்தின் முத்தே போற்றி
கற்புக் கனலாம் சக்தி போற்றி
காமகலாம்பிகா கமலா போற்றி
ஸ்ரீ.......... மாதா லலிதா போற்றி
காஞ்சித் தலத்தின் கனியே போற்றி
கருணை வடிவே காமாட்சி போற்றி

20. நமஸ்காரம்

நமஸ்காரம் எங்கள் நமஸ்காரம் - அம்மா
நமஸ்காரம் எங்கள் நமஸ்காரம்

நாற்பத்து மூன்றாகும் கோணங்கள் நடுகின்ற
நாயகி காமாட்சி நமஸ்காரம்
ஶ்ரீசக்ர மாளிகை சிந்தாமணி தேவி
ஜகத்ஜனனி கல்யாணி நமஸ்காரம்
பூபுரம் முதல் உந்தன் கோபுரம் வரையிலும்
ஆவரணமாய் ஆளும் தேவிமார்கள்
யோகினியர் அவர் ஆணை செயலாற்றும் தேவதைகள்
யாவரும் நின்ஒளி அலைக என்றோ

நமஸ்காரம் எங்கள் நமஸ்காரம் - அம்மா
நமஸ்காரம் எங்கள் நமஸ்காரம்

எத்தனை பிரளயம் வந்தாலும் அம்மா உன்
சிம்மாசனம் என்றும் நிலையானது
யாராட்சி நடந்தாலும் நடவாது போனாலும்
காமாட்சி உன்னாட்சி கலையாதது
நித்திய யௌவனம் நின்மேனி சௌந்தர்யம்
எப்போதும் என்கண்ணில் நிறைகின்றது
பத்மாசனக் கோலம் ஆனந்த பரவசம்
பலகோடி நிலவாக குளிர்கின்றது

நமஸ்காரம் எங்கள் நமஸ்காரம் - அம்மா
நமஸ்காரம் எங்கள் நமஸ்காரம்

திரிபுரா திரிபுரேசி திரிபுர சுந்தரி
திரிபுர வாஸினி திரிபுராஶ்ரீ

திரிபுர மாலினி திரிபுரா ஸித்தா
திரிபுராம்பா இவர்கள் சூழ்ந்திருக்க
ப்ரம்மா திருமால் ருத்ரன் மஹேஸ்வரன்
கட்டிலதன் கால்க ளாக
சதாசிவ பீடத்தில் சகல லோஹம் காக்கும்
திரிபுர சுந்தரி ராஜேஸ்வரி
ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி - மஹா திரிபுரசுந்தரி
ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி

நமஸ்காரம் எங்கள் நமஸ்காரம் - அம்மா
நமஸ்காரம் எங்கள் நமஸ்காரம்

மாங்காட்டுமயில்

21. நீதான் என்மனசாட்சி

மாங்காடு காமாட்சியே
நீதான் என் மனசாட்சியே
நீங்காத செல்வங்கள்
நீதானே தரவேண்டும்
நான் வாழ உனைவேண்டினேன்
நாவார உனைப் பாடினேன் - அம்மா (மாங்காடு)

போராடும் உலகத்தில் யாரோடு நான்சேர
நீதானே கதியாகிறாய் - ஒருபோதும்
தேயாத நிலவாகிறாய்
மாறாத மறையாத மங்காத சௌபாக்யம்
தாயே நீ தரவருகிறாய் - உன்
பாதார மலர் தருகிறாய் - அம்மா (மாங்காடு)

தீமீது கால்வைத்து
நீசெய்யும் தவம்போலே
யாராலே கூடும் அம்மா - இந்த
விளையாட்டு உனக்கேனம்மா
சிவனாரின் சீற்றத்தை
தணியச்செய்ய தந்திரமோ
உமையாள் உன் நாடகமோ - இதை
அறிவார் யார் ஒருமர்மமோ - அம்மா (மாங்காடு)

22. மாங்காட்டு மயில்

தெய்வமேவந்து தவமிருக் கின்றது
தீயின் நடுவினிலே - ஐந்து
ஜ்வாலை நடுவினிலே
கையில் மணிமாலை தலைக்குமேல் வைத்து
கண்மூடி ஜபிக்கிறது - அந்த
காட்சி சிலிர்க்கிறது (தெய்வமே வந்து)

வலதுகால் பாதம் நாபிக் கமலத்தில்
வைத்த திருக்கோலம்
இடதுகால் பெருவிரல் அக்கினி நுனியில்
நிற்கின்ற மாயம்
கணவனைக் காண மனைவி அவள் செய்யும்
கடுமையான யாகம்
இதுபோல் வேறு எங்கே உண்டு
சத்திய உத்வேகம் (தெய்வமே வந்து)

காமாட்சி அன்னையின் தவக்கனல் அடங்க
அர்த்தமேரு வ்யூஹம்
ஆதி சங்கரர் அமைத்தது நமக்கு
வாய்த்த நல்யோஹம்
நீ தானே கதிஎன மாங்காடு செல்க
தொடர்ந்து ஆறு வாரம்
தீராத துயரும் தீரும் உறுதி
கருணை ப்ரவாஹம் (தெய்வமே வந்து)

23. மாங்கல்ய பலம் தா

காமாட்சி அம்பா கமலாட்சி
ஓம் எனும் நாதமே உன்காட்சி (காமாட்சி)

ஏனிந்த ஜபமாலை சுற்றிலும் தீஜ்வாலை
எதற்கம்மா தவக்கோலம் ஏகாந்தம்
எத்தனை காலம் ஒருகாலில் சிவயோகம்
எங்கள்குறை நீக்குவது எந்த நேரம்
(காமாட்சி)

ஆதி சங்கரர் அமைத்த ஸ்ரீ சக்ரம் வீற்றிருப்பாய்
தேவிநீ எங்கள் முகம் பார்த்திருப்பாய்
ஆறு வெள்ளிக் கிழமை நேரில் வந்தே தொழுதால்
ஏதுகுறை எனினும் தீர்த்து வைப்பாய்
(காமாட்சி)

மாங்கல்ய பிச்சை மடிப்பிச்சை கேட்டுவந்தோம்
மாங்காட்டு தாயுன்னை நம்பி நின்றோம்
மங்களா ஜகன் மாதா சங்கரி சிவகௌரி
மலர்த்திருப் பாதங்கள் சரணடைந்தோம்
(காமாட்சி)

24. மாங்காட்டு பெண்

மாங்காட்டு மானே காமாட்சி
மங்கள சுந்தரி லோக நாயகி
தாய் நீ நிற்பது பஞ்சாக்னி
தவக்கனல் தெறிக்குது நின்திருமேனி (மாங்காட்டு)

ஆதி சங்கரர் அர்த்த மேருமுன்
ஜோதி பிழம்பென தோன்றும் தேவியே
நவசக்திகள் வந்து சூழும் ஈஸ்வரி
மார்க்கண்டனை ஆட்கொண்ட தாயே
ஆறு வாரங்கள் வேண்டி வந்தவர்
நினைத்திருந்ததை நிறைவேற் றிடுவாய்
கற்பகத் தருவே காம தேனுவே (மாங்காட்டு)

தாலி பாக்கியம் தந்திடும் அன்னையே
தடங்கல் யாவையும் தகர்த்திடு பவளே
மாதர் திருமணம் நடத்தும் அம்பிகே
மங்களம் யாவும் வழங்கும் செல்வியே
உந்தன் கோயில் சரணாகதம் என்றால்
அன்பு காட்டியே ஆதரிக்கும் அம்மா (மாங்காட்டு)

25. மகராணி காமாட்சி

விருத்தம் : எப்போதும் என்பக்கம்
நீ இருக்க ஏன் துக்கம்
பொற்பாத கமலங்கள் போற்றி - உன்
புன்னகைக்கு ஆயிரம் போற்றி

பாடல் : மாங்காட்டில் வாழ்கின்ற மகராணி காமாட்சி
நீங்காத செல்வங்கள் நீயே - நான்
நினைத்ததை நடத்திவைக்கும் தாயே
மனவீட்டில் உன் காட்சி
மகிழ்ச்சிக்கு அத்தாட்சி
மங்களச் செயல்கள் எல்லாம் நடக்கும் - உன்
குங்குமக் கரங்கள் அதைக் கொடுக்கும் (மாங்காட்டில்)

ஆறு வெள்ளிக் கிழமை கோயில் வலம் வந்தாலே
தீராத வினையாவும் தீரும் - உன்
திருவடி சரணம் என்றால் போதும்
ஆதி..... சங்கராின் அர்த்த மேருவிலே
ஜோதி..... வடிவாக வந்தாய் - என்றும்
நீதியை நிலை நாட்ட நின்றாய் (மாங்காட்டில்)

எரிகின்ற அக்கினியில் இடக்காலின் விரல் ஊன்றி
ஜபமாலை உருட்டுகிறாய் நீயே - ஒரு
தவக்கோலம் காட்டுகிறாய் தாயே
ஏதுபிழை செய்தாலும் தீ நெருப்பில் நீறாக்கி
தீதகற்றி மன்னிப்பாய் அம்மா - உன்
தரிசனம் கண்ணுக்குள் அம்மா (மாங்காட்டில்)

26. தீ நடுவில்

எரிகின்ற தீயில்
ஒரு கால் ஊன்றி
தவம் செய்யும் காமாட்சி - உன்
அருள் பெற வேண்டி
இருகனி கொண்ர்ந்தேன்
வரம் தரும் காமாட்சி - அம்மா
மாங்காடு காமாட்சி - அம்மா
மாங்காடு காமாட்சி (எரிகின்ற)

நீ தந்த கனியில் உன்னையே கண்டு
குங்குமப் பொட்டு வைத்தேன்
ஆறு முறை உன் கோயில் வலம் வந்து
அங்கம் உருள்கின்றேன்
ஆடி வெள்ளியில் நோன்புகள் இருந்தேன்
பாடித் துதித்திருந்தேன்
அம்மா உன் மகிமை கண்டு கொண்டேன்
என்னையே நான் மறந்தேன் (எரிகின்ற)

ஆதி சங்கரர் மேருவை அமைத்தார்
ஆலயம் குளிரச் செய்தார்
காஞ்சி ஜகத்குரு காமாட்சி உந்தன்
கருணையை எடுத்துரைத்தார்
தாயே என் ப்ரார்த்தனை பலித்தது சத்தியம்
மறவேனே அம்மா
நான் வாழ்வ தெல்லாம் நீ தந்த பிச்சை
நல்லாசி தந்திடம்மா (எரிகின்ற)

27. நீங்காதசெல்வம்

மாங்காடு காமாட்சி நீங்காத செல்வம்
நம் கண்கண்ட தெய்வம்
மாங்கல்யம் சௌபாக்யமே

சந்நிதியில் நில்லு
ஓங்கொறய சொல்லு
அம்மாவே முடிச்சு வைப்பா
ஏன் இன்னும் சந்தேகம் (மாங்காடு காமாட்சி)

ஆறுவெள்ளிக் கிழமை - அவ
கோயிலுக்குச் செல்லு - ஒன்
வேண்டுதல்கள் நிறைவேறும்
வெற்றி வந்து சேரும்

ஒன்னெயே நீ ஒப்படைச்சா
அன்னையவ ஆதரிப்பா
மாறாதே சோராதே (மாங்காடு காமாட்சி)

எலுமிச்சங் கனிகள் - அதில்
இருக்குதம்மா வழிகள் - அதை
அவகொடுக்க நீ எடுக்க
யார் தடுக்கக் கூடும்

நெனச்ச தெல்லாம் நடத்திவப்பா
நிச்சயமா கை கொடுப்பா
தயங்காதே மயங்காதே (மாங்காடு காமாட்சி)

28. புதுநிலா

காட்டில் வீசும் நிலாவொளி யாலே
யாருக்கு லாபம் அம்மா - மாங்
காட்டில் வீசும்நின் நில வொளி யாலே
எல்லோர்க்கும் க்ஷேமம் அம்மா
சொல்வது புரிகிறதா - உங்கள்
மனத்தில் பதிகிறதா (காட்டில்)

தொல்லைப் படுவோர் எல்லோரும் அவளின்
எல்லைக்கு வாருங்கள்
வெள்ளிக் கிழமை விரதம் இருந்து
தாயைப் பாருங்கள்
கொள்ளைச் சிரிப்பில் உங்களை மறந்து
கைகூப்பித் தொழுதிடுங்கள்
அள்ளிக் கொடுப்பாள் ஆறுதல் தருவாள்
நடக்கும் நம்புங்கள்
மாங்காடு காமாட்சி - அவள்
சத்தியத்தின் சாட்சி (காட்டில்)

எரிகின்ற தீயில் இடக்கால் ஊன்றி
கடுந்தவம் செய்கின்றாள்
இந்த உலகம் வாழ்வதற் காக
கணவனை வேண்டுகின்றாள்
அர்த்த மேருவின் சக்தியாய் அமர்ந்து
அற்புதம் நடத்துகிறாள்
ஆறு வாரம் அவளின் தரிசனம்
கேட்டதைக் கொடுக்கின்றான்
மாங்காடு காமாட்சி - நம்
மகிழ்ச்சிக்கு அத்தாட்சி (காட்டில்)

29. சிவமும் அவள் பலம்

சுற்றியும் அக்கினி பற்றி எரியுது
சுடர்கள் ஐந்து கிளையாய் பிரியுது
மத்தியில் மற்றொரு ஜோதி தெரியுது
உத்தமி அவள்யார் உமா மகேஸ்வரி
சித்தம் தளரா சக்தி பார்வதி

ஜகமே............ அவள் தவமே
சிவமும்.......... அவள் பலமே (சுற்றியும்)

எரிதழல் அதன் மேல் இடக்கால் பெருவிரல்
மணிச்சுழி நாபியில் வலக்கால் மடக்கினள்
சின்முத் திரையை இதயத்தில் நாட்டினள்
ஜெபமா லையினை தலைமேல் தாங்கினள்
நாசியின் நுனியில் நயனம் பதித்தனள்
நடுக்கண் மூடி த்யானத்தில் லயித்தனள்

பத்தினி அவள் யார் பர்வத வர்த்தினி
பரமனின் கண்மணி கௌரி மனோன்மணி

ஜகமே............ அவள் தவமே
சிவமும்.......... அவள் பலமே (சுற்றியும்)

விரிசடைக் கடவுளின் விழிமறைத் ததனால்
புவியதன் இருளினை போக்குவேன் என்றாள்
மலர்மணம் குளிர்ந்திடும் மாங்காடு வந்தாள்
மாதவம் கண்டிட வாஎன் றழைத்தாள்
அர்த்த மேரு சக்கரம் அமர்ந்தாள்
ஆனந்த ப்ரவாக அருள்மழை பொழிந்தாள்

சுந்தரி அவள்யார் திரிபுர சுந்தரி
மங்கள குங்குமம் தந்திடும் சங்கரி
ஜகமே............ அவள் தவமே
சிவமும்.......... அவள் பலமே (சுற்றியும்)

30. நீலமலர் விழியாள்

விருத்தம் :

மாங்காடு - ஒரு - தேன் கூடு
மகிழ்வோடு - அதன் - புகழ்பாடு!

பாடல் :

நினைத்த தெல்லாம் தருவாள்
நீல மலர் விழியாள்
நெஞ்சத்தில் எழுதி வைத்த
ஓவியமாய்த் திகழ்வாள் (நினைத்த தெல்லாம்)

தனக்கு நிகரில்லாள்
தாயாய்த் தாங்கிடுவாள்
மனக்குறைகள் களைவாள்
மகிழ்ச்சியினைத் தருவாள்
(நினைத்த தெல்லாம்)

குன்றத்தூரை அடுத்த
மாங்காட்டில் குடியிருக்கும்
கோல மயில் தோன்றும்
கோயில் குளிர்ந்திருக்கும்
அன்பு வைத்துச் சென்றால்
அன்னை தவமிருக்கும்
அக்னிகுண்டம் எரியும்
நெற்றிக் கண்ணும் தெரியும் (நினைத்த தெல்லாம்)

காமாட்சி என்பார்க்கு
கவலையெல்லாம் கலையும்
காலகாலம் தொடரும்

தீ வினைகள் தொலையும்
ஆதிசங்கரர் அமைத்த
பீடம் அருள் பொழியும்
தேவி கொலுவிருக்கும்
ஸ்ரீ சக்ரம் மலரும் (நினைத்த தெல்லாம்)

31. தீருது வாட்டம்

மாங்காடு என்றாலே மனம் எங்கோ செல்லும்
காமாட்சி மஹிமை கவிபாடச் சொல்லும்
தேனீக்கள் போலே சேருது கூட்டம்
தேவியைக் கண்டதும் தீருது வாட்டம்

(மாங்காடு)

ஒற்றைக் காலை உட்புறம் மடக்கி
மற்றைக் காலை தீயின் மேல் நிறுத்தி
கணவனை எண்ணி ஜப மணி உருட்டும்
கருணையால் நம்மை இதயம் அணைக்கும்

(மாங்காடு)

சங்கரர் அமைத்த சக்கரம் மணக்கும்
சக்தியின் பீடம் சாந்தியைக் கொடுக்கும்
ஆறு முறைகள் அன்னையைக் கண்டால்
நேரினில் பேசும் நினைத்தது நடக்கும்

(மாங்காடு)

32. தங்கம் அவள் அங்கம்

தங்கம் அவள் அங்கம் தகதகவென ஜொலிக்குது
தவமிருந்து பழுத்த பழம் மாங்காட்டில் இனிக்குது
(தங்கம்)

மங்களமே வடிவமாக சங்கரி அங்கே இருக்கின்றாள்
மடித்த காலை மாற்றாமல் ஒற்றைக் காலில் நிற்கின்றாள்
அக்னி தேவன் சுற்றிவர அன்னை நடுவில் சிரிக்கின்றாள்
ஆறுமுறை சென்று வந்தால் ஆறுதலை கொடுக்கின்றாள்
(தங்கம்)

ஸ்ரீ புரத்தின் லலிதாம் பிகை
ஜெபமாலை உருட்டுவாள்
யோகேஸ்வரி காமேஸ்வரி
தீவினைகளை விரட்டுவாள்
பாசாங்குசம் கரும்பு தனுசு
புஷ்ப பாணம் ஏந்துவாள்
பாலும் பழமும் பெற்றுக் கொண்டு
பக்தர் களைத் தாங்குவாள் (தங்கம்)

33. தவக்கோலம்

ஆம்ப்ரவனம் - ஏகாம்ப்ரவனம் - நீ
இருக்கும் இடம் - அறம் - வளர்க்கும் தலம்
காமாட்சி - உன் - தவக்கோலம் - அதைக்
காண்பவர்க் கெல்லாம் குதூகலம் (ஆம்ப்ரவனம்)

ஆறுமுறை நின் கோயில் வந்தால்
போதும் அம்மா துயர் தீரும் அம்மா
மேருமலை உன் பீடம் அம்மா
பாவம் எல்லாம் தூளாகுதம்மா (ஆம்ப்ரவனம்)

மேருமலை அதன் மீதினிலே
தாயிருக்க உன் தயவிருக்க
வாழ்வினிலே இனி ஏது குறை
வாய் மலர்ந்தே ஒரு வாழ்த்து உரை (ஆம்ப்ரவனம்)

வேறு :

மாங்காடு கொலு விருக்கும் காமாட்சி - சுப
மங்களம் தந்து காப்பாயே
ஓங்காரமாய் விளங்கும் ரூபிணியே
உன் பாதம் காட்டி அருள்வாயே (ஆம்ப்ரவனம்)

வேறு :

முத்தைச் சிந்திடும் முகம் காட்டிடு
சித்தத் தினிலே வந்திடு
எத்திக் காயினும் வெற்றி உனக்கென
சக்தி வேலினை தந்திடு
எமபயம் போக்கிடு இருவினை நீக்கிடு
எங்கே உன்கரம் நீட்டிடு

உமையவளே என் இமைகளைத் திறந்திடு
சற்றே உற்றுப் பார்த்திடு
என் கவலைகள் ஓய்ந்திடும் அம்மா - உன்
காவல் வேண்டும் அம்மா (ஆம்பரவனம்)

34. ஆறு வார தரிசனம்

ஆறு வாரம் தேடி வந்து கோயில் வாசல் பாடி நின்று
தேவி உந்தன் பாதம் தொட்டு தண்டனிட்டு மண்டியிட்டு
வேண்டினேன் விரத மிருந்தேன் - அம்மா
வெற்றி தன்னை பெற்று மகிழ்ந்தேன்
மாமரக் காட்டினில்
பால்பழம் கேட்டனை
எலுமிச்சைக் கனிதந்தனை
நாற்பது நாட்களில்
கேட்டது கிடைத்தது
நாளும் நாளும் நன்மை சேர்ந்தது (ஆறு வாரம்)

அர்த்தமேரு சக்கரத்திலே - உன்
நர்த்தனங்கள் நாளும் நடக்குதே
சக்தி உந்தன் மெய்த் தவத்திலே - உன்
பக்தர் ஆசை சித்தி யாகுதே
அஞ்சு தீயின் நடுவில் நின்று இடது காலின் விரலை ஊன்றி
அஞ்சிடாமல் யோகம் செய்யும் ஆதி சக்தியே
கண்கள் மூடி மந்த்ரம் சொல்லி கையில் மாலை உருட்டும் - கௌரி
கணவனுக்கு நோன்பு நோற்கும் கா.....மாட்சியே
(ஆறுவாரம்)

சங்கரர்க்கு சொந்தம் ஆயினை - ஆதி
சங்கரர்க்கு சந்தம் தந்தனை
நொந்தவர்க்கு பந்தம் ஆயினை - முன்
வந்தவர்க்கு வாழ்வு தந்தனை

பூர்வ ஜன்ம புண்யம் உந்தன்
கோயில் காணும் பாக்யம் என்று
மேடை ஏறி நன்றி சொல்லி போற்றிப்பாடுவேன்
நாதமாக கீத மாக
வேத மாக ஞான மாக
பாதம் காட்டும் பார்வதிக்கு வாழ்த்துக் கூறுவேன்
(ஆறுவாரம்)

35. வெள்ளிக் கிழமைகள்

ஆறு வெள்ளிக் கிழமை அம்பிகையை தரிசிக்க
மாங்காடு செல்வோர்க்கு யோகம்
மனத்தினிலே நினைத்ததெலாம் கூடும்
- கைகூடும் (ஆறு வெள்ளி)

தீராத வினையாவும் தீர்த்து வைப்பாள் காமாட்சி
நேராகப் பேசுகின்ற தெய்வம் - அவள்
நிலையான பலகோடி செல்வம்
- அருள்செல்வம் (ஆறு வெள்ளி)

நாலா புறத்தினிலும் தீ சூழ நடுவினிலே
நாயகி தவமிருக்கும் காட்சி
நங்கையர்க்கு கணவனே எல்லாமும் என்பதொரு
அன்பினையே காட்டுகின்ற சாட்சி
- அத்தாட்சி (ஆறு வெள்ளி)

ஒருகை தலைமேலும் மறுகை நெஞ்சினிலும்
திரிபுர சுந்தரியின் கோலம்
ஜபமாலை பாமாலை இருவழியிலும் அவளை
சார்ந்திடலாம் என்று சொல்லும் போதும்
- ஞானபோதம் (ஆறு வெள்ளி)

முழுநிலவே
மூகாம்பிகையே

36. கண்கொள்ளாக்கோலம்

விருத்தம்:

குடசாத்ரி மலையிலே நவராத்ரி கொலுவிலே
கோல எழில் காண வந்தேன்
கொல்லூரில் தவழ்ந்தோடும் ஸௌபர்ணிஹை ஆற்றில்
குளித்தவுடன் கோயில் கண்டேன்
நடைவாசல் தாண்டியதும் கணபதியைக் கைகூப்பி
நலம்பெருக வேண்டி நின்றேன்
நானாக வந்தேனா நீயாக அழைத்தாயா
தாயுள்ளம் கண்டு கொண்டேன்

படநாகம் தலைமேலே குடையாக அசைந்தாட
பார்த்ததும் பாதம் பார்த்தேன்
பயப்படாதே மகனே பக்கம் வா என்பது போல்
பாலூறும் மழலை கேட்டேன்
அடடா! உன் அன்பென்ன அழகென்ன அருளென்ன
அன்னையே மூகாம்பிகே
ஆனந்தப் பரவசம் தேனள்ளித் தெளித்திட
அம்மா என் றதிசயித்தேன்

தாமரைப் பொய்கையோ தமிழ்பாடும் வைகையோ
தங்கத் தேரோட்டமோ
சண்பகப் பூக்களில் சிந்திடும் வாசமோ
தாய்ப்பாசம் தாலாட்டுமோ
மாமறை வேதமோ ஓமெனும் நாதமோ
மதுர யாழ் இசை மீட்டுமோ
மங்கையர்க் கரசிநின் குங்குமத் திருமேனி
செங்கதிர்ச் சுடர் காட்டுமோ

வான் மழைத் தூறலோ,மா,பலா,வாழையோ
வண்ணங்களின் கூட்டமோ
தேவியின் சந்நிதி சங்கநிதி பதுமநிதி
நவரத்தினக் கோட்டமோ

ஏனென்று தெரியாத என்னென்று புரியாத/
சுகமொன்று விளைகின்றதே
நீயென்றும் நானென்றும் பேதங்கள் இல்லாத/
நிலையொன்று மலர்கின்றதே

மணிமுடி தரித்தாலும் வளர்பிறைச் சந்திரன்
ஒளிவந்து தவழ்கின்றதே
மலர்மணம் வீசிடும் நெற்றியோ மந்தார
வானவில் வளைகின்றதே
புருவங்கள் பொன்னிறக் கருவண்டுகள் சேர்ந்து
புகுந்திடும் பூஞ்சோலையோ
இருவிழிகள் கருமணிகள் திருப்பாற்கடலிலே
திருமாலின் திருப்பள்ளியோ

வளர் அன்னப் பேடையின் மென்மைச் சிறகுகள்
கனிவான கன்னங்களோ
வடிவழகி செவ்விதழ் வடிக்கின்ற புன்னகை
ஒருகோடி மின்னல்களோ
செவிஇரண்டும் ஓங்காரச் சித்திரம் காட்டுதோ
துதிப்பாடல்கள் கேட்குதோ
திருமுகத்தில் நாசி தம்புரா மீட்டுதோ
தேவியே மூகாம்பிகே

சங்குக் கழுத்தினில் வைரப் பதக்கங்கள்
கண்கவரும் விண்மீன்களோ
தடமார்பில் விளையாடும் நவமணிச் சரடுகள்
பொன்மலை வண்ணங்களோ
சங்குசக்கரம் ஏந்தும் செங்கமலக் கைகள்
மகர தோரணங்களோ
சக்தியிவள் தருகின்ற அபயமும் வரதமும்
சாந்திக்கு மார்க்கங்களோ

செம்பருத்திநிறச் சிற்றாடைச் சிற்றிடை
இருக்கின்றதோ இல்லையோ
சிங்கார ஒய்யார அலங்காரக் காட்சிக்கு
கொல்லூர்தான் எல்லையோ
சிங்க வாகனம் ஏறி பத்மாசனக் கோலச்
சித்திரம் தீட்டுகின்றாள்
சிலம்பொலிக்கும் பாதம் போற்றுவார் நாவிலே
தித்திப்பை ஊட்டுகின்றாள்

கோலரிஷி தவம்செய்து கொண்டாடும் பூம்பாவை
ஜாலங்கள் காட்டுகின்றாள்
ஊமையும் பேசிடும் ஊனமும் நிமிர்ந்திடும்
உண்மையை நாட்டுகின்றாள்
பாலமுருகன் இங்கு வீர பத்ர னோடு
ஆலயம் வலம் வருகிறான்
ஆஞ்ச நேயன் நின்று சஞ்சீவித் தழைதந்து
அன்பர்க்கு நலம் தருகிறான்

மார்க்கண்ட முனிவாழ ஆயுளைத் தந்தவள்
மூகா சுரனை அழித்தாள்
ஆதிசங்கரர் பாட ஆனந்த லகரிக்கு
அடியெடுத்துக் கொடுத்தாள்
சாமுண்டீஸ்வரி, சரஸ்வதி,லக்ஷ்மி
மூவரும் ஓர் உருவமே
சோட்டானிக் கரைவாழும் **பகவதி** தோற்றமும்
மூகாம்பிகை தெய்வமே

மூகாம்பிகை காளியே
மூகாம்பிகை லக்ஷ்மியே
மூகாம்பிகை வாணியே!

37. ஜோதிமயம்

நாலாபுறம் சூழும் ஜோதிமயம்
மூகாம்பிகை வாழும் கோலாபுரம் (நாலாபுறம்)

அன்னைக்கு அலங்காரம்
ஐயனுக்கு அபிஷேகம்
அவள்பாதி அவன்பாதி
சிவசக்தி செழுஞ்ஜோதி
தென்மதுரைத் தொடர்போடு
கொல்லூரில் ஏற்பாடு
குங்குமத்தால் வழிபாடு
மற்றதெல்லாம் பிற்பாடு (நாலாபுறம்)

அர்ச்சனைக்குப் புஷ்பங்கள்
அமைதிக்கு மந்திரங்கள்
உற்சாகக் கடலினிலே
உடல் சிலிர்க்கும் உணர்வலைகள்
பக்தர்களின் பாட்டொலிகள்
பார்வதிக்குப் பரவசங்கள்
சித்தி தரும் முத்தி தரும்
திருவடிக்கு சரணங்கள் (நாலாபுறம்)

காலந் தவறாத பூஜை நிவேதனங்கள்
ஜோதி சொருபிணிக்கு சந்தானத்தால் கோலங்கள்
ஞாலத்தைப் படைத்தவளின் நடுச்சாமப் படையலிலே
நமைக் காக்கும் ஔஷதங்கள் கஷாயம் தீர்த்தங்கள்
மூடனுக்கும் ஞானம் வரும் முடவனுக்கும் கால் வளரும்
மூகாம்பாள் சந்நிதியில் எத்தனையோ அற்புதங்கள்
(நாலாபுறம்)

38. மோகனப் புன்னகை

மோஹனப் புன்னகை ஆகம வேதங்கள்
மொழிந்திட உதிர்ந்ததுவோ
முத்துப்பல் வரிசையில் திக்கெட்டும கோளங்கள்
நர்த்தனம் புரிந்தனவோ

நீலக் கடலென்ன கார்குழல் விரிந்ததோ
நீண்ட கருவிழியோ
மூகாம்பா நின்முகம் வேறெங்கும் காணாத
ஸௌந்தர்ய லஹரியோ!
எழிலே ஒரு இளமாதென இங்கே வந்ததுவோ
இள ஞாயிறு சுடர் மேனியை கண்கள் கண்டனவோ
அமுதம்தரு திருமா மகள் எழுந்தாள் சமர்புரிந்தாள்
மகிஷாசுரன் மடிந்தானென பத்மாசனம் அமர்ந்தாள்
(மோஹன)

ஜோதி சுயம்பு நின் தோற்றத்தைப் பார்த்திட
கோயில் அமைந்தது வோ
தூயநின் கருணைமுன் ஆயிரம் ஆயிரம்
தொல்லை பறந்ததுவோ
ஆதி பராசக்தி அன்னைநின் சந்நிதி
ஆனந்தக் காட்சி யன்றோ
பாடிப் பரவிடும் பாக்கியம் பெற்றபின்
வார்த்தைக்குப் பஞ்சமுண்டோ!

வேறு சந்தம்:

சங்கின் ஒலி சங்கத் தமிழ் தந்தே கவி கேட்கும்
பொங்கிச் சுழல் சக்ரம் பல சந்தங்களைச் சேர்க்கும்
சிங்கம் எதிர் வந்தேனென தீமைகளைத் தாக்கும்
அஞ்சேலென அபயக்கரம் என்றும் எனைக் காக்கும்

வேறு சந்தம்:

தேவி உன் திருச்சபை தரிசனம் கண்டிட
தேவர்கள் வருகின்றார்
வாழி! மஹாலக்ஷ்மி கோடி யுகம் என
பூமழை பொழிகின்றார்
கோல மஹரிஷி யோகம் பயின்றது
ஞாலம் வாழ்க என்றே
பாலா திரிபுர சுந்தரி எங்களை
பாலிக்க வேண்டுகிறோம்!

காயத்ரி, சாவித்ரி கலைமகளே போற்றி
நாராயணி புவனேஸ்வரி திருமகளே போற்றி
ஸ்ரீலலிதா, சிந்தாமணி, சிவசக்தி போற்றி
கோலாபுரி ராஜேஸ்வரி,மூகாம்பிகை போற்றி!
மூகாம்பிகை போற்றி மூகாம்பிகை போற்றி!
அம்மா...... அம்மா......!

39. மலைவளம்

சஞ்சீவி மலைமகள் தந்த கலைநங்கை சஹ்யாத்ரி பெயர்
சஹ்யாத்ரி
தங்கத்தளிர் மேனி பச்சைப் பட்டாடை மங்கள குங்கும காட்சி
சுகலயம் ஒரு சுந்தரம்
(சஞ்சீவி மலை மங்கை)

எங்கெங்கும் காணும் சக்தி இங்கு வந்து
தங்குவதற்கு ஓர் இடம் பிடித்தாள்
சிங்கத்தில் ஏறிவந்த சுந்தரி அமர்ந்திருந்த
தேரை நிறுத்த இவள் வடம் பிடித்தாள் ஆ..........
(சஞ்சீவி மலை மங்கை)

ஆரண்யம் நடுவிலே அன்னை அரக்கனுடன்
போரிட வந்ததைப் புரிந்து கொண்டாள்
மூகன் எனும் அந்த மூர்க்கன் ஓடாமல்
காவல் அரணாய் சூழ்ந்து நின்றாள்

வாகை சூடி நின்ற தேவியை வாழ்த்திட
தேவரும் மூவரும் தேடி வந்தார்
ஜோதிர் லிங்கமாய் சக்தியும் சிவமும்
மாறியது கண்டு கைதொழுதாள் ஆ.......
(சஞ்சீவி மலை மங்கை)

கோல மஹரிஷியின் ஞானதவம்
கால காலமாய் நிகழும் தவம்
ஆதி சங்கரர் அருளமுதம்
பாடலாய் வந்த பசுமை நிலம்
தாயவள் கோயில்

கோபுர மாகி
வா என அழைக்கும் குடசாத்ரி
மாமலை உருவில்
சாந்தியைப் பொழிவாள்
மங்கள தேவி சஹ்யாத்ரி (சஞ்சீவி மலை மங்கை)

40. நதிவளம்

குதித்துக் குதித்து தாவிவரும் கோலக் கன்னிகை-முத்துக்
குளித்த முகத்தில் அள்ளி வீசும் கொள்ளை புன்னகை
இசைக்குப் புதிய வடிவம் கொடுக்கும் அவளின் வளைக்கை ஒரு
நதியின் உருவில் நடனமாடும் சௌபர்ணிகை
சௌபர்ணிகை
(குதித்து)

பச்சை மஞ்சள் பூசிக்கொண்டு பவனி வருகிறாள் - பல
பச்சிலைகள் சூடிக்கொண்டு காட்சி தருகிறாள்
சித்தர் கணம் போற்றிபாட சிலிர்த்துப் போகிறாள் - ஒரு
தெய்வீக ஒளி மலரும் தீர்த்தம் ஆகிறாள்
(குதித்து)

சத்தியத்தை காப்பதற்கு தவழ்ந்து வருகிறாள் - ஓம்
சாந்தி என்னும் நாதம் கேட்க நம்மை அழைக்கிறாள்
நித்த நித்தம் பக்தர்களின் பாவம் போக்குவாள் - என்றும்
நிரந்தரமாய் சுதந்திரமாய் நடைபோடுவாள்
(குதித்து)

41. கோயில் சூழல்

வருகின்ற பக்தர்கள் திருவடி நோகாமல்
மகிழ மரங்கள் மலர் பரப்பும்
வழியெங்கும் தலைதாழ்த்தி வரவேற்புக் கூறியே
குளிர்தரும் சோலைகள் நிழல்கொடுக்கும்

கீழ்த்திசைக் கதிரவன் வாழ்த்துகிறான்
கோபுரம் பார்த்தே வணங்குகிறான்

தாயே எங்கள் தாயே அருள்வாயே அருள்வாயே

வெற்றித் திருமகன் வீரபத்ரன் அவன்
சக்தியைச் சுற்றியே வருவானோ
பத்துத் திருக்கரம் சித்தி விநாயகன்
பாம்புக ளாக வருவானோ

வாணியின் வீணா மண்டபமோ
வாக்கினில் வந்திடும் வைபவமோ

தாயே எங்கள் தாயே அருள்வாயே அருள்வாயே

பலப்பல பெயரிலே ஈஸ்வரன், நடுவிலே
பஞ்ச முகத்தோடு ஐங்கரன்
கண்ணனும் அநுமனும் வந்ததன் காரணம்
லக்ஷ்மி நீ என்பதை அறிந்தனன்

சங்கரன் போற்றிய மங்களமே
செளந்தர்ய லஹரியே சங்கரியே

தாயே எங்கள் தாயே அருள்வாயே அருள்வாயே

(வருகின்ற)

42. வரலாறும் வழிபாடும்

அவள் கோயில் மணி ஓசை எதிரொலிகள் கேட்கின்ற
அதிகாலை
அவள் வருகை எதிர்நோக்கி பறவைஎலாம் பாட்டெழுப்பும்
சுபவேளை

சோட்டானிக் கரைவிட்டு
கலைவாணி நடந்து வரும்
பாட்டையெல்லாம் பசுஞ்சோலை பூத்தூவும்
கொல்லூரில் அவள்வந்து
கொலு அமர்ந்த கோலம் கண்டு
நல்லவர்கள் உள்ளமெல்லாம் நலுங்கு வைக்கும்
(அவள் கோயில்)

சங்கரரின் த்யானத்தில் சங்கமித்த கௌரியவள்
கொண்டு வந்தாள் பொற்கலசம் அமுதம் தானோ
சலங்கை இசை கேட்ட மஹான் விழிமலர்ந்த போதினிலே
சௌந்தர்யம் பொங்கி வரும் வெள்ளம்தானோ
(அவள் கோயில்)

ஞானத்தின் பாதையிலே
மெய் மறந்த போதையிலே
ஆனந்தக் கவிமலர்கள் அர்ச்சனைகள்
போற்றியிலே மனம் குழைந்து
போகாமல் தங்கி விட்டாள்
நாளெல்லாம் நிகழ்த்துகிறாள் அற்புதங்கள்
(அவள் கோயில்)

நதிக் கரையில் சங்கல்பம் நடைவாசல் ப்ரார்த்தனைகள்
வலம் வந்து அன்னையவள் திருநாமம்
சகஸ்ரம், சாஷ்டாங்கம் சாமுண்டி சண்டி ஹோமம்
திருஉருவம் குங்குமத்தால் அபிஷேகம்

மண்டலம் ப்ரஸாதம்
மஹாதிரு மதுரம் அதை
உண்டவர்கள் உயர்ந்தவராம் ஒளிபெறலாம்
கண்டவர் பூர்வதவம்
கொண்டவர் என்பதனால்
வந்தவர் மனோரதம் நிறைவேறும் (அவள் கோயில்)

43. சந்நிதி சுகம்

கங்கை நதியாய் பொங்குது என்மனம்
காரணம் என்ன தாயே - குளிர்
சந்தன மழையோ பெய்யுது இங்கே
சக்தி நீ சொல்லு வாயே -
அம்மா.....அம்மா.....அம்மா.....அம்மா...
(கங்கை)

நிலவும் கதிரும் கலந்த ஒளியில்
நீந்தி வருகின்றேன்
கலைமாடத் தலைவாசல் கண்டதும் மெய்மறந்து
நிலை குலைகின்றேன் - அம்மா....அம்மா.....அம்மா....அம்மா
(கங்கை)

உலகெலாம் பூத்த பூக்கள் அத்தனையும்
திருவடி கலந்தனவோ
ப்ரணவ நாதமோ வண்டின் கானமோ
சலங்கையின் சலனங்களோ
ஓர் இனிய மணம்
தேன் இசை நடனம்
இது புதிய சுகம்
உன் அரிய வரம்
அருகினில் வரவர உருகுகிறேன்
எதிரினில் இருந்தும் மருகுகிறேன் - மனம் தடுமாறினேன்
(கங்கை)

உன்னை நான் காண்பதன் முன்னே
என்னையே நான் இழந்தேனா
சந்நிதி மூலம் எங்கே

தாய் உந்தன் கோலம் எங்கே
அன்னையே கண்களைத் திறந்துவிடு
ஆனந்த அமுதம் பொழிந்துவிடு
கடைவிழியால்
கடையனையும்
ஒருகணம் பார்த்துவிடு
அருட்கடலே.....
சிறுபடகை.....
அக்கரை சேர்த்து விடு (கங்கை)



44. முழுநிலவே

முழுநிலவே மூகாம்பிகே - உன்
மோஹனப் புன்னகை தூவிடும் பூமழை
குளிர குளிர கொடுத்து வைத்தோம் அம்மா - எங்கள்
குலம் காக்கும் தெய்வமும் நீதானம்மா (முழு நிலவே)

குடசாத்ரி மலைத் தென்றல் கொண்டு வரும் மணமும்
சௌபர்ணிஹை ஆற்று தண்ணீரின் சுகமும்
இருபெரு மணி ஓசை நாதத்தின் லயமும்
அருகினில் வந்த பின்னே அம்மா உன் அழகும்
இழுக்கின்றதே - மனம்
பறிக்கின்றதே
அணைக்கின்றதே - நலம்
அருள்கின்றதே (முழு நிலவே)

பத்மா சனக் கோலம் சிற்றாடை அலங்காரம்
மரகதம் தவழ்கின்ற மார்பினில் தங்கவடம்
சங்குசக் கரம் ஏந்தி தருகின்ற அபயவரம்
ஜோதிர்லிங்கம் மின்னும் பாதம் சரணாகதம்
கலைமகளே - அன்பு
திருமகளே
மலைமகளே - எங்கள்
குல விளக்கே (முழு நிலவே)

45. தாமரைப் பாதம்

தாயே மூகாம்பா......
உன் தாமரைப் பாதம்
நான்மறை வேதம்
சரணம் சரணம் அம்மா (தாயே)

வாழ்வுச் சுழலோடு போராடும் போதும்
காக்கும் கரங்கள் என் கண்முன்னே தோன்றும்
வாஎன அழைக்கும் கலங்கரை விளக்கே
யாழின் எழுசுரமே
ஆனந்த சாகரமே (தாயே)

திக்குத் தெரியாமல் திகைச்தே நான்நின்றேன்
தேடக் கிடைக்காத செல்வத்தைக் கண்டேன்
தேவிநின் கருணை மழையினில் நனைந்தேன்
நீதான் புகலிடமே
நானுன் அடைக்கலமே (தாயே)

என்றும் துணையாக நீ உள்ள போது
எங்கும் எப்போதும் அணுகாது தீது
பாரெனக் கூறும் பௌர்ணமி நிலவே
காலைப் பனித் துளியே
ஜோதி சுடரொளியே (தாயே)

46. பாதாதி கேசவருணனை

மாமறைகள் போற்றுகிற தாமரைகள் கண்டேன்
ஈடில்லா திருவடிகள் கண்ணில்ஒற்றிக் கொண்டேன்
வாழைமரத் தோரணங்கள் வாழ்க ஒலி கேட்டேன்
பார்முழுதும் ஒய்வெடுக்கும் தாய்மடியை பார்த்தேன்

யானைகளின் துதிக்கைகள் கோத்திருக்கும் கோலம்
அன்னைநீ கால்மடக்கி அமர்ந்திருக்கும் யோகம்
மேகலைகள் சுற்றிவரும் ஊர்வலத்தின் காட்சி
கோளங்கள் இடை அசைவில் ஆடுகின்ற மாட்சி

வைடூர்யப் பாற்கடலில் வலம்புரியோ நாபி
வைரப் பாளங்கள் வரிசைகளோ பெருந்தோள்கள்
முத்தமிழ் ஏடுகளோ தாய்வயிற்றின் சுருள்மடிப்பு
முக்கனியின் சாறாக தித்திக்கும் திருமார்பு

மரகதப் பச்சைமணி உனது நிறம் உணர்த்தும்
கழுத்திலே நீலமணி கணவன் புகழ் உரைக்கும்
செண்பகச் செவிகளிலே பத்மராகம் சிரிக்கும்
கன்னத்தின் சுழிகளிலே மாணிக்கம் தெறிக்கும்

பவளச் சோலையிலே முத்து மலர் பூத்திருக்கும்
இதழின் புன்னகையோ ஏழுலகும் காத்திருக்கும்
பிறைநெற்றித் திலகமதை புருவமேகம் தழுவும்
அலை பாயும் விழிவானம் அருள்மழையைப் பொழியும்

தேயாத முழுநிலவோ தாயின் எழில்வதனம்
மாயை அதன் தோகைகளோ கோமேதகக் கூந்தல்
நாதமோ வெண்சங்குக் காலமோ சக்கரந்தான்
மூகாம்பா பொற் கரங்கள் காத்திடுக வாழ்த்திடுக!

47. ஜோதிர்லிங்கம்

எங்குமே காணாத அற்புதம் அதிசயம்
லிங்கவடிவில் இங்கு ஸ்தாபிதம் - ஜோதிர்
லிங்க வடிவில் இங்கு ஸ்தாபிதம்
இதன் கிரணம் கோகர்ணம் வரையிலும் மிகவிரிந்து
அழகாக ஒளிவீசி சுடர்பரப்பும்
(எங்குமே)

தங்க ஒளி சிந்துகிற பந்தலிலே தாய்முன்னே
தாவி வந்து ஒருகோடி மின்னல் ஆடும்
தானாக உருவான பாணத்தின் ஊடே ஓர்
தகதகக்கும் ஸ்வர்ணமய ரேகை ஓடும்
(எங்குமே)

வலதுபுறம் சிவபாகம் ப்ரம்மன் மால் ருத்திரனின்
வடிவங்கள் இணைகின்ற திருக்கோலம்
பெரிதான இடபாகம் மாகாளி மஹாலக்ஷ்மி
பெருந்தேவி சரஸ்வதியின் பீடம் ஆகும்
(எங்குமே)

முப்பெரும் தேவியர்கள் முக்கூடல் சங்கமத்தில்
மூகாம்பிகா தேவி சிரிக்கின்றாள்
அர்த்தநாரி சிவசக்தி ஸ்ரீ சக்ர நடுபிந்து
முக்கோண சக்கரத்தில் இருக்கின்றாள்
(எங்குமே)

48. தலபுராணம்

உயிர்க்குலம் எல்லாம் நீ பெற்ற பிள்ளைகள்
அரக்கர்கள் விதிவிலக்கோ - அம்மா....
யாரே ஆயினும் அடைக்கலம் என்றால்
தாய்க்கது ஒருபொருட்டோ (உயிர்க்குலம்)

கம்ஹா சூரன் கடுந்தவம் புரிந்தான்
கால பைரவியாக அருள் புரிந்தாய்
தன்னை மீறிய ஆணவத்தால் அவன்
தருக்கிய போது நறுக்கிவிட்டாய் (உயிர்க்குலம்)

கோல மஹரிஷியின் வேள்வித் தீயினில்
திரிபுர பைரவியாய் நீ எழுந்தாய்
நான் முகனைத் தேடி ரிஷிய மூகாசல
மாமலை குகையினில் அவன் ஒளிந்தான்

தர்மம் நடுங்கி அழுகிறது
தபோ வணங்கள் அழிகிறது
அண்ட கோளங்கள் அலைகிறது
அகந்தை நர்த்தனம் புரிகிறது (உயிர்க்குலம்)

என்ன செய்ய? என்ன செய்ய? என்ன செய்ய?
கேட்கும் வரங்கள் கொடுப்பதற்கே - கை
நீட்டுகின்றான் படைப்பாளி
போட்ட முடிச்சை அவிழ்ப்பதற்கே - உடன்
புறப்பட்டு சென்றாய் மாகாளி (உயிர்க்குலம்)

அசுரனும் மகனே முனிவரும் மகனே
யாருக்கு முதலிடம் கேள்விக்குறி
அரக்கன் வாயை அடைத்து விட்டாயே
அதுதானே உன் அன்பு நெறி (உயிர்க்குலம்)

உமா தேவியின் ஒருமகன் ஊமை
உலகம் அதனால் பிழைத்தது
க்ஷமா தேவிஉன் அநுக்ரஹத் தாலே
அவனுக்கும் விழாக்கள் நடக்குது (உயிர்க்குலம்)

அன்று கொல்லாமல்
நின்று கொன்றாயே
கொல்லூர்த் தலம் கண்டாயே
என்றும் உனைக்காண
ஏகாந்தக் கோலம்
கொண்டு திகழ்கின்றாயே

தாயே மூகாம்பா.....
கொல்லூர் மூகாம்பா.....
தாயே மூகாம்பா தாயே தாயே மூகாம்பா (உயிர்க்குலம்)



49. வேண்டுதல்

இங்கேயே தங்கி எதிரிலேயே அமர்ந்து
இனி எந்தன் காலம் நடக்கட்டுமே - உன்
சுந்தர முகம் காட்டும் சுகந்த சுக சொர்க்கம்
என்றென்றும் இவ்வாறே நிலைக்கட்டுமே
என்றென்றும் இவ்வாறே நிலைக்கட்டுமே (இங்கேயே)

சங்கம் சக்ரம்தாங்கி அபயவரம் அருளும்
சாந்த ஸ்வரூபமே சத்தியமே
சிம்மாசனம் தன்னில் பத்மாசனக் கோலம்
நெஞ்சில் தேனூற்றாய் தித்திக்குமே
நெஞ்சில் தேனூற்றாய் தித்திக்குமே (இங்கேயே)

வெண்கொற்றக் குடையாக நாகம் படம் விரிக்க
சந்திர சூரியர் அருகிருக்க
எட்டுத் திக்கும் உந்தன் வெற்றிக் கொடி பறக்க
ஏழிசை சரம்கொண்டு கவிதொடுக்க
ஏழிசை சரம்கொண்டு கவிதொடுக்க (இங்கேயே)

பங்குனி வசந்தத்தில் வனபோஜன விருந்துண்டு
நான் உனைப்பாடி களித்திருக்க
நவராத்ரி தீபஒளி அலங்காரம் பார்த்திருக்க
நான் ஏங்க நீதாங்கி புன்னகை செய்ய
நான் ஏங்க நீதாங்கி புன்னகை செய்ய (இங்கேயே)

50. தேவியைச் சுற்றி தெய்வங்கள்

இது தேவி கோயில்தானா - இல்லை
தேவ லோகம் தானா
அந்த மூவர்களும் வந்து கூடிடுவார் - சக்தி
லீலை பாடத்தானா (இது)

எதிரே ஜோதிர் லிங்கத்திலே
அவர் இருக்க வேண்டும் என்றோ
ஓர் இடத்தினைக் கொடுத்தே அமரச் செய்தாய்
நீ இடம் அமர்ந்து கொண்டாய்

அந்த வாணியும் மஹா லக்ஷ்மியும்
உன்னோடு சேர்ந்திருந்தார்
ஒரு கல்லிலும் மூன்று கடவுளும் அடங்கும்
மகிமை காட்டத்தானா (இது)

சேனா பதியாம் வீரபத்ரர்
அவர் காவல் புரிய வந்தார்
ஒரு பாம்பின் உருவில் பார்க்க வந்தார்
அந்த சுப்ரமண்ய ஸ்வாமி
பத்துக் கரங்களால் சக்தி பதம் தொழ
ஸ்ரீ கண நாதர் வந்தார்
ஸ்ரீ ஆஞ்சநேயரும் கோகுல கண்ணனும்
தேடி வந்து விட்டார் (இது)

51. நெஞ்சமெல்லாம் பூ மழை

தண்ணிலவோ சந்தனமோ - என்
தாய் உன் பார்வையிலே
நெஞ்சமெல்லாம் பூ மழையே - உன்
நேசம் தேன் சுவையே (தண்ணிலவோ)

கோல முனிவர் மாதவம் செய்ய
ஆரண்யம் வந்தவளே
தீய அரக்கன் மூகனைக் கொன்றே
கொல்லூர் என்றவளே

மூவர் சீராட்ட தேவர் பாராட்ட
அங்கு கோயில் கொண்டவளே
பல சித்தர் கணம் சக்தி உனை
நித்தம் தொழ அழைப்பவளே (தண்ணிலவோ)

ஆதி சங்கரர் தேவி உன் அழகை
பாடிடச் செய்தவளே - என்றும்
அந்தக் கவிதை ஸௌந்தர்யலஹரி
மந்திரம் என்பவளே

உந்தன் பூமாலை சந்தப் பாமாலை
தரும் தேவி மூகாம்பிகையே
என் நாவில் வரும் நாதம் திரு
பாதம் தரும் சிலம்பொலியே (தண்ணிலவோ)

52. மஞ்சள் நிலாமுகம்

நவமணிக்ரீடம்
கமலங்கள் பாதம்
கோலாபுரி தேவி
கொலு அமர் கோலம்

(நவமணி)

சங்கும் சக்கரமும் திருமாலின் சின்னம்
எங்கும் எப்போதும் துணையாகத் தொடரும்
வரதம் அபயம் என வழிகாட்டும் கரங்கள்
மரகத மார்பு - பனிமலர்ச் சோலை
மஞ்சள் நிலா உன் மங்கள வதனம்

(நவமணி)

கால்கள் மாலைகளாய் பத்மாசனம்
தேவி எழுந்தருளால் சிம்மாசனம்
எதிரினில் சிவலிங்கம் சுடர்வீசும் தங்கம்
கலைமகளாக திருமகளாக
மலைமகளாகவும் அருள்பவள் நீயே

(நவமணி)

53. சங்கரிசெளந்தரி

தாயே நீயே தயையின் வடிவமே
கொல்லூர் நகர் வாழும் அம்மா உமையவளே
(தாயே)

மூகாம்பிகையே மூவுலகாள்பவளே
நால்வகை வேதமும் போற்றும் நாயகியே
உனையே தினமும் தொழுதிடும் நெஞ்சிலே
நிறைந்திடும் தேவியே திரிபுர சுந்தரியே
(தாயே)

ஆதி சங்கரர்க்கு அருளிய தெய்வமே
ஸ்ரீ சக்ர ரூபமாய் திகழும் தயாபரியே
கருணை மழையே காக்கும் தேவியே
சாந்தி வழங்கிடும் சங்கரி செளந்தரியே
(தாயே)



54. சோட்டாணிக் கரையிலும் மூகாம்பிகை

சோட்டா னிக்கரை பகவதி ஆலயம்
அதிகாலை உன்தோற்றம்
சொல்லின் செல்வியாய் வீணையை மீட்டிடும்
கலைமகளின் அலங்காரம்
அது கண் கொள்ளா திருக்கோலம்
அம்மா மூகாம்பா அருட்கோலம் (சோட்டாணிக்கரை)

திருப்பள்ளி எழுச்சி தவசுப்ர பாதம்
திசையெல்லாம் எதிரொலிக்கும்
கேரளம் கன்னடம் நானிலம் எங்கணும்
தேவியை போற்றிடுமே..... (சோட்டாணிக்கரை)

சாமுண் டீஸ்வரி சங்கரர் வேண்டிட
திரும்பாமல் செல்க என்றாள்
சலங்கை ஒலிகள் நின்றதும் திரும்பினார்
கொல்லூரில் நின்று விட்டாள்
(சோட்டாணிக்கரை)

நாள்தொறும் ஒருமுறை வேண்டுதல் பலித்திடும்
சரஸ்வதியாய் வருவே னென்றாள்
நம்பிக்கை வைத்தபின் சந்தேகம் கூடாது
சரணா..... கதி என்றாள்.....
(சோட்டாணிக்கரை)

55. நாள் வழிபாடு

காலை நல்ல வேளையிலே
தேவி அவள் கோயிலிலே
பூ களையும் நிர்மால்யம்
பொன்னார் மேனி
புத்தம் புது அலங்காரம்
தந்த தாவனமாம்
தனி பூஜையதும்
உதயத்தின் பூஜையும் இதயத்தைக் கவர்ந்திடும்
(காலை)

அம்மனை சுமந்து ஆலயம் சுற்றும் ஸ்ரீ பலி காண்போம்
பின்னர்
குடிசாந்தி சுவைத்து சாந்தி தா என்றே
கைகள் கூப்பித் தொழுவோம்
சங்கு சக்ர தாரி மூன்று சக்தி சேர்ந்தார்
அவள் பொற்பதங்கள் துதிப்போரை
சக்தி அக்கரைக்குச் சேர்ப்பாளே (காலை)

நண்பகல் நேரம் மங்கள ஆரத்தி ஸ்ரீ பலி மீண்டும்
பின்னர்
சந்த்யா காலம் சந்நிதி திறக்கும் மண்டபத்தில் வாணி
வேதம் சங் கீதம் அங்கு நாளும் தேவ கானம்
நம் நோய் தீர ஒரு தீர்த்தம்
அந்த தாய் தருவாள் வினை நீக்கம் (காலை)

56. சந்நிதான மகிமை

விழிகளில் கோடி கவி படைத்தாய்
அருகினில் வாநீ என அழைத்தாய்
கருவறைக் குள்ளே கனி கொடுத்தாய்
பிறவியின் முடிச்சினை தளர்த்தி விட்டாய்

தாயே மூகாம்பா - உன்
தாள்மலர் சரணடைந்தேனே (விழிகளில்)

கோளம் யாவும் புள்ளிகளோ
கோலம் எங்கே சொல்லிடுவாய்
ஆடும் ஆட்டத்தை யாரறிவார்
அறிந்தார் யாரோ கூறிடுவார்

தாயே மூகாம்பா - உன்
தாள்மலர் சரணடைந்தேனே (விழிகளில்)

ஊமை பேசும் ஒளி பிறக்கும்
கூனும் நிமிரும் வழிதிறக்கும்
தீமை விலகும் நோய் அகலும்
கோலா புரியில் குறை தீரும்

தாயே மூகாம்பா - உன்
தாள்மலர் சரணடைந்தேனே (விழிகளில்)

57. கோயில் சூழல்

முன்னைச் செய்த புண்ணியமோ
உன்னைத் தேடிச் சரணடைந்தேன்

உன் அம்மா உன் புன்னகையே
எந்நாளும் பௌர்ணமியே
பொன் மாரி பொழிகின்ற தாயே - என் (முன்னைச் செய்த)

சஞ்சீவிச் சாரலிலே - சத்தியத்தின்
சாம்ராஜ்யம் காணவந்தேன்
சஹ்யாத்ரி மலைத்தொடரில் - சாந்தி அதன்
சந்நிதியைக் கண்டு கொண்டேன்
உன்
பொற்கோயில் சுற்றுகிற ஸௌபர்ணிஹை ஆறு
பூச்சுமந்து வருகுதடி
எங்கும் புத்தொளி பரவுதடி (முன்னைச் செய்த)

ஸ்ரீ சக்ரம் கோயிலுக்கு - மகிழமரம்
திருவிளக்கு ஏற்றிடுதோ
வா என்று வரவேற்று - மணி ஓசை
நாதங்கள் கூப்பிடுதோ
செங்
கதிரோனும் தொழுகின்ற திருவாசல் வந்த பின்பு
கவலைகள் பறந்த தடி
இந்த உலகமே மறந்த தடி (முன்னைச் செய்த)

58. திருவிழாக்கள்

நவசக்தி நாயகி நவதுர்கை சாமுண்டி
கொல்லூரின் ராணி யவள்
திருமகள் கலைமகள் மலைமகள் சேர்ந்தனர்
சக்திகள் சங்கமங்கள்
பொங்குது மங்களங்கள்
எங்கும் மங்களங்கள்
சங்கமங்கள் சக்தி சங்கமங்கள்
மங்களங்கள் சுப மங்களங்கள் (நவசக்தி)

ஆனித் திங்கள் வளர்பிறை அஷ்டமி மூகாம்பிகை நின்
அவதாரம்
புரட்டாசியிலே நவநாள் திருநாள் நாளும் வண்ண அலங்காரம்
பங்குனி மாதம் வசந்த விழாவில் தேரில் தேவி ஊர்கோலம்
ஆற்றங் கரையில் வன போஜனம்
கோலா புரியில் கோலாகலம் (நவசக்தி)

சண்டி ஹோமம் ருத்ராபிஷேகம் சகஸ்ரநாமம் பாராயணம்
சங்கர ஜெயந்தி க்ருஷ்ண ஜயந்தி விநாயக சதுர்த்தி ஸ்ரீ விரதம்
ஒகுலிப் பண்டிகை ஜெயம் பெறுவோர்க்கு என்றும் வெற்றி -
தேடி வரும்
தாயவள் தந்திடும் திருமதுரம்
ஞானம் நல்கும் தேனமுதம் (நவசக்தி)

மூகாம்பிஹையே மூலக்கனலே ஆதிசக்தி அருள்மழையே
ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி திரிபுர சுந்தரி சகல பாக்யமும் தரும்
உமையே
வைர வைடூர்யம் கோமேதகமே நீலம் பவளம் மரகதமே
முத்தே பத்மமே மாணிக்கமே
நவமணிச் சுடரே ஆனந்தமே (நவசக்தி)

59. எல்லாம் நீதான்!

எல்லாமே நீதானே மூகாம்பிகே - ஏழை
என்நெஞ்சில் சுடர்வீசும் ஜோதியே
ஏதுகுறை நீஇருக்க திருமகளே
தாலாட்டும் தாயே வரம் அருளே

(எல்லாமே)

கற்பனைக்கு அடங்காத காவியமே
கண்ணாலே பேசுகின்ற ஓவியமே
ஆதி அந்தம் நீ ஆதார ஸ்ருதி நீ
அம்மா சரணம் கற்பகம் நீ

(எல்லாமே)

சங்கும் சக்கரமும் ஏந்துவாய்
சர்வ மங்களமும் தரவந்தாய்
குளிர்ந்த பார்வையே போதுமே
கோடி துன்பங்களும் ஓடுமே

(எல்லாமே)

60. எனக்காகத் தனியாய்

பாலாறு தேனாறு கோலாகலம்
ஸ்ரீதேவி நீவாழும் தேவாலயம்
என்றென்றும் உன்னருகே நான்இருக்க வேண்டும்
எனக்காகத் தனியாய்உன் அருட்காட்சி வேண்டும்
(பாலாறு)

வாயார மனமார கவிபாடுவேன்
வடிவழகு பாராட்ட சொல்தேடுவேன்
ஒருநாளும் காணாத திருநாளிது
வருநாளும் வாழ்நாளும் இனிதானது (பாலாறு)
நானுந்தன் கோவில் வாயிற்படி ஆவேன்
நந்தவனம் பூக்கின்ற முல்லைமலர் ஆவேன்
தேரோடு உருண்டோடும் திருச்சக்ரம் ஆவேன்
தேவிஉன் கணுக்காலின் கால்சலங்கை ஆவேன்
(பாலாறு)

காயத்ரி சாவித்ரி சாரதா தாயே
ஸ்ரீதேவி பூதேவி திருமகளும் நீயே
இமயத்தின் உச்சியிலே எழுந்தருளும் உமையே
எந்நாளும் இருவிழிகள் காக்கின்ற இமையே
(பாலாறு)

61. ஆரண்யவாசம்

ஆனந்தம் ஏகாந்தம் ஆரண்ய வாசம்
அம்மாவின் நீலவிரி என்னோடு பேசும்
தாமரை ஆசனத்தில் தேவி அவள் அமர்ந்தாள்
தானாகவே வந்து தண்ணருள் பொழிந்தாய் (ஆனந்தம்)

சௌபர்ணிகா என்னும் சாந்திதரும் தீர்த்தம்
சந்நிதியின் முன்னே நின்றாலே மோட்சம்
தெய்வீக சாம்ராஜ்யம் கொல்லூரில் நடக்கும்
திருக்காட்சி காண்போர்க்கு கேட்டதெல்லாம் கிடைக்கும்
(ஆனந்தம்)

தேடாத செல்வம் அவள் வாடாத மலரே
தெவிட்டாத தேனமுது சிங்காரச் சுடரே
பாடாத பாட்டவளே ஏழிசை நாதம்
நாதாந்தம் வேதாந்தம் பேரழகுக் கோலம்
(ஆனந்தம்)

அவள்மதுர இதழ்களிலே ஆடிவரும் சிரிப்பு
அபயமென வந்தோர்க்கு பட்டாடை விரிப்பு
சுகமாகும் அவள்கோயில் சுற்றுவதே சொர்க்கம்
துன்பத்தைத் துரத்திடவே வந்திடுவாள் பக்கம்
(ஆனந்தம்)

62. நாகக்குடையாள்

பண்ணெடுத்துப் பாடுகின்றேன் மூகாம்பிகா
நின்னைச் சரணடைந்தேன் நிம்மதியைத்தா
என்னுடைய உயிரினிலே இயங்கும் ஸ்யாமளா
எந்நாளும் நீஎனக்கு ஆசிகள் தா
(பண்ணெடுத்து)

நாகமது குடைபிடிக்க நலந்தரவே வீற்றிருப்பாய்
சோகமெலாம் போக்கிடவே அபயகரம் காட்டிடுவாய்
ஜோதிர்லிங்கம் முன்னே பேரொளி வீசிடுதே
ஆதி சங்கரரின் அருள்பாட்டு கேட்டிடுதே
(பண்ணெடுத்து)

நவராத்ரி நாட்களிலே தீபங்கள் திருவிழா
நவநவமாய் நாயகிக்கு அலங்காரக் கலைவிழா
கலைமகள் திருமகள் காளியாய் நீ இருக்க
கலிதீர்க்க துணையிருக்க கவலை எனக்கெதற்கு
(பண்ணெடுத்து)

63. யாவும் உன்செய்ய

அம்மா...... அம்மா......
அம்மா...... அம்மா...... அம்மா
உனை நம்பினேன் மூகாம்பா காப்பாற்று
தாயின் கருணையே மழையாகுமே
யாவும் உந்தன் செயலே (அம்மா)

உந்தன் சந்நி தானம் - நிர்மல
நீல வான மாகும்
அன்பு ஒன்று போதும் - கர்மா
யாவும் ஓடிப் போகும் (அம்மா)

வந்து போகும் மாயம் - இதிலே
கண்ட தென்ன லாபம் - ஒரு
மந்தரம் உந்தன் நாமம் - என்
துன்பம் போக்கும் கானம் (அம்மா)

கோடி தீபம் ஏற்றி - கொல்லூர்
கோயில் பாடி போற்றி
பாத கமலம் பற்றி - தொழவே
நாளும் சேரும் வெற்றி (அம்மா)

64. அவள்தான் நிலவு

தினம்தினம் இவளே நிலவாகிறாள்
அதிகாலை எழுகின்ற கதிராகிறாள் (தினம் தினம்)

கடலோடு குதித்தாடும் அலையாகிறாள்
காற்றோடு கூத்தாடி எழுசுரங்கள் இசைப்பாய்
இதோ இங்கே கண்முன்னே எதிர்நின்று சிரிப்பாள்
இவள் தானே மூகாம்பா கொல்லூரில் இருப்பாள்
(தினம் தினம்)

செளந்தர்ய லஹரிஎனும் சங்கரரின் ஸ்லோஹம்
சக்தி இவளுக்கோ அதன்மேல் ஒருமோஹம்
சிங்கத்தின் மேலேறி ஊர்வலம் செல்லும்
சுந்தரியே மூகாம்பா உள்ளத்தை அள்ளும்
(தினம் தினம்)

65. வனவிருந்து

சௌபர்ணிகா நதியின் கரையினில் பூஜை
அறுசுவை வனவிருந்தை அருந்திட வாரீர்
வசந்த விழாக்காண மனைவியொடு வாரீர்
அன்னையை வழிபடவே மக்களொடு வாரீர்
(சௌபர்ணிகா)

பொழுது புலருமுன்னே புதுமலர் அலங்காரம்
போற்றி பூபாளம் சாந்தி நிர்மால்யம்
தந்த தாவனபூஜை ஸ்ரீபலி ப்ரதட்ச்ணம்
குடிசாந்தி ப்ரஸாதம் பரமசுகம்
(சௌபர்ணிகா)

உச்சிக்காலம் முடிந்து மங்கள ஜோதி
சரஸ்வதி மண்டபத்தில் அஷ்டாவ தானம்
வேத கோஷம் கீதம் கஷாயம் விநியோகம்
வேண்டிவரும் பக்தருக்கு நேர்ந்ததே யோகம்
(சௌபர்ணிகா)

66. மூலநாதம்

விருத்தம் :

ஓம்...... ஓம்......!
ஓங்கார நாதமே மூலமானது
ஸ்ரீம்..... ஸ்ரீம்.....!
ஸ்ரீங்கார மந்த்ரமே தேவியானது
நான்என்னும் ஆணவம் ஓடிப்போனது
நாயகி பாதமே நாடிவந்தது

பாடல் :

ஓங்கார நாதமே மூலமானது
ஸ்ரீங்கார மந்த்ரமே தேவியானது
நான் என்னும் ஆணவம் ஓடிப்போனது
மூகாம்பிகை பாதம் முன்வந்தது (ஓங்கார)

ஏழ்சுரங்கள் தோற்ற மாக
ஏழு வண்ணம் காட்சி யாக
மாயை என்னும் கடலைக் காட்டி
வாழ்வு என்னும் தோணி ஓட்டி
தேவி வருகிறாள் ஆம் தேவி தெரிகிறாள் (ஓங்கார)

ஞானத் தாகம் மீற மீற
வானப் படிகள் ஏற ஏற
சாம கானம் பாடப் பாட
சத்தி யத்தின் சக்தி கூட
தேவி நடக்கிறாள் ஸ்ரீ தேவி சிரிக்கிறாள் (ஓங்கார)

67. ஸ்ரீ சக்ரஸ்தாபனம்

ஸ்ரீசக்ர ஸ்தாபனம் சிம்மாசனம்
தேவியின் யோஹம் பத்மா சனம்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி
ஓம் சாந்தி சாந்தி சாந்தி
ஓம் சாந்தி சாந்தி சாந்தி
(ஸ்ரீ சக்ரஸ்தாபனம்)

காரணி பூரணி கல்யாணியே
நான்முகி நாராயணி ஸ்ரீதுர்கா தேவியே
யாருன்னைத் துதித்தாலும் அருள்புரியும் தாயே
அற்புத அதிசய சித்துகள் செய்வாயே
(ஸ்ரீ சக்ரஸ்தாபனம்)

ஹம்ஸம் எனும் அஜபா மந்திரம் மூச்சு
ஹ்ருதய கமலத்தினுள்ளே என்றும் உன் பேச்சு
எல்லாமே நின்பாட்டு ஸ ரிகம பத நிஸ
எல்லாமே நின்பாட்டு
இன்றோடு துன்பங்கள் என்னை விட்டுப் போச்சு
(ஸ்ரீ சக்ரஸ்தாபனம்)

மூகாம்பிஹே! மூகாம்பிஹே!

68. ஜெயமாகட்டும்!

ஜெயமாகட்டும் வெற்றி நிலையாகட்டும்
ஜகமெங்கும் பேரின்பம் வழிந்தோடட்டும்
கொல்லூரின் தனித்தெய்வம் காப்பாற்றட்டும்
கௌரி அவள் கால்பட்டு கலிதீரட்டும்
(ஜெயமாகட்டும்)

காரிருளில் மின்னலினைக் காட்டுகின்றாள்
கவலைகளை பிணிகளை ஓட்டுகின்றாள்
யார்செய்த பாக்கியமோ அவதரித்தாள்
அனைவர்க்கும் மூகாம்பாள் ஆசிதந்தாள்
(ஜெயமாகட்டும்)

எந்நாளும் அவள் குடையே நிழலாகட்டும்
எப்போதும் அவள் நினைவே துணையாகட்டும்
பொன்னோடு பொருளோடு புகழ்சேரட்டும்
பூத்தூவும் புன்னகையாள் அருள்கூடட்டும்
(ஜெயமாகட்டும்)

சுபமங்களம் நித்ய சுபமங்களம்
நலம் பொங்குக தினம் வளம்தங்குக
மூகாம்பாள் திருநாமம் வாழ்க வாழ்க!

69. பசிதீரும்

பார்த்த மாத்திரத்தில் பசிதீரும்
பக்கம் வந்தவுடன் பயம் நீங்கும்
யார்க்குக் கிடைக்கும் அம்மா இந்த பாக்யம்
மூகாம்பிஹா தரிசனம் சௌபாக்யம் (பார்த்த)

நீலக் கருவிழிகள் பால்வார்க்கும்
நெஞ்சக் கவலைகளைத் தூளாக்கும்
கோல மகரிஷியின் மெய்ஞ்ஞானம்
கொலுவீற் றிருக்கும் நின் சந்நிதானம் (பார்த்த)

பூத்துக் குலுங்குகின்ற புன்சிரிப்பு - அது
பொழுது புலர்கின்ற ஒளிக் கலப்பு
வார்த்தை கிடைக்க வில்லை தேடுகின்றேன் - நீ
வழங்கும் கருணையினால் பாடுகின்றேன்

நாராயணி கௌரி உமையவளே
நவராத்ரி நாயகி திருமகளே
காயத்ரி சாவித்ரி கலைமகளே
ஆதிசக்தி தாயாய் அருள்பவளே
மூகாம்பிஹா அம்மா மூகாம்பிஹா
முப்போதும் எப்போதும் மூகாம்பிஹா

70. சரணாகத நிலையம்

சரணாகத நிலையம் தேவி
சாமுண்டி நீயே அபயம்
இனி ஏது பயம்? (சரணாகத)

ப்ரபஞ்சம் யாவும் நின்பாதம்
ததிந்தோம் ததிந்தோம் என ஆடும் நடனம்
அதனில் ஜனனம் (சரணாகத)

நவநவ மானதுன் படைப்பு - மிக
நளின மானதுன் சிரிப்பு
யுகந் தோறும் மாறும்நின் நடிப்பு - அது
உற்சாக லீலா வினோதக் களிப்பு
வியப்பு (சரணாகத)

ஆணவ அரக்கனை அழித்தாய்
தேவர்கள் வாழ வழிவகுத்தாய்
ஜோதித் தோற்றம் அளித்தாய்
கோலா புரியில் நிலைத்தாய் - அறம்
வளர்த்தாய்

எங்கள் தாய் மூகாம்பிகா
அன்புத் தாய் மூகாம்பிகா! (சரணாகத)

71. முத்துச்சரம்

மூஹாம்பிகா அம்மா மூஹாம்பிகா
மூஹாம்பிகா தேவி மூஹாம்பிகா

சிம்மாசனம் அதன்மேல் பத்மாசனம்
தேவி அவள் கைகளிலே சங்குசக்கரம்
செம்மாதுளை விரிந்தால் முத்துச்சரம்
அம்மா எனில் தோன்றும் அபயக்கரம்
(மூஹாம்பிகா)

உமையாள் பார்த்தாலே ஊமையும் பாடாதோ
குமாரி விளையாடும் கோலாபுரம்
சிவசக்தி லயமாக ஸ்ரீ சக்ர மயமாக
ஜெக ஜோதி அலைபாயும் நாலாபுரம்
அவளே நம் சொந்தம் ஆதி சுந்தம்
ஆனந்த சாம்ராஜ்யம் தாய் சந்நிதானம்
(மூஹாம்பிகா)

ஸௌபர்ணிகை தீரம் சங்கராின் த்யானம்
ஸௌந்தர்ய லஹிரி சங்கீதம்
சக்தியின் ஓங்காரம் சத்திய ரீங்காரம்
எப்போதும் எதிரொலிக்கும் ஏகாந்தம்
அவளே ஆதாரம் அன்பின் ப்ரவாஹம்
திருமுகம் காணாமல் பிறந்தென்ன லாபம்
(மூஹாம்பிகா)

72. எல்லாம் ஆகியசக்தி

எல்லாம் ஆகிய சக்தி இருக்கிறாள்
கோலா புரத்தினிலே - அவள்
இருக்கும் இடம் சென்றால் நினைத்த தெலாம் கூடும்
தாயின் சிரிப்பினிலே
(எல்லாம்)

சொல்லுக அவள் நாமம் மூகாம்பிகா அம்மா
துணையாய் வருக என்றே - அவள்
தோற்றம் கண்டவர்கள் ஏற்றமே காண்பார்கள்
தொடரும் வெற்றி ஒன்றே!
(எல்லாம்)

செல்வதுதான் அரிது சென்றவர்கள் வாழ்வில்
திருப்பம் உருவாகும் - அவர்
விருப்பம் நிறைவேறும்
திருமகளும் அவளே கலைமகளும் அவளே
சிவசக்தியும் அவளே - மூவரும்
சேர்ந்தே அமைந்தவளே
(எல்லாம்)

ஸ்வர்ண ரேகை கொண்ட ஜோதிர்லிங்கம் அங்கே
சுடரொளி பரப்பிடுமே - நம்
துன்பம் துடைத்திடுமே
சொல்லி முடியாத கொள்ளைப் பேரழகு
அன்னை இருப்பிடமே - அது
அன்பின் பிறப்பிடமே!
(எல்லாம்)

73. என்றென்றும் கோலாகலம்

கொல்லூரில் என்றென்றும் கோலாகலம்
நாளும் உன் விளையாடல் ஓராயிரம்
உனைத்தானே...... நினைத்தானே......

உனைத்தானே நினைத்தேனே
ஓடோடி வந்தேனே
ஓம் நாதமே மறைவேதமே உனை நாடினேன்
என் ஜீவனே மூகாம்பிகா உனை பாடினேன்
எம்முள் இருப்பவளே - எங்கள்
கண் முன் நிற்பவளே
அமுதே அழகே அறிவே ஆனந்தமே

தேவாதி தேவர்கள் தேடும்
பாதாரம் ஆதாரம் ஆகும்
வாயார பாடும் போது பேரின்பமே
(உனைத்தானே)

நாகந்தான் குடையாக நளினந்தான் நடையாக
காலடியில் சிங்கம் வந்தே முகம்காட்ட
சிவப்புப் பட்டுப் பாவாடை
மார்பில் மரகத மணிமாலை
சங்கு சக்கரம் அபயம் வரதம்
தங்க வடங்கள் மின்னுதடி
கம்பீரம் நீ அமர்ந்த அழகு திருக்கோலம்
கண் ஆடும் குழைகள் ஆடும் அபிநயம் தானோ
வைர ஒளி மூக்குத்தி வழி காட்டுமே

மைவிழிகள் ஏழைக்கு பால் வார்க்குமே
இதுநாள் பெருநாள் வருநாள் திருநாள் தானே
உன்கோயில் முன் தோன்றும் கொடியும்
உன் வாசல் வந்தேறும் படியும்
ஓயாது ஒலிக்கின்ற மணியும்
தவம் செய்ததோ

(உனைத்தானே)

தீயோனை தீர்த்தாயே நல்லோரைக் காத்தாயே
ஆரண்யம் தன்னில் அம்மா கொலு அமர்ந்தாய்
ஆதி சங்கரர் பாடலிலே
ஆசை வைத்தனை அம்பிகையே
வேந்தர் யாவரும் வீர வாள் தரும்
காந்த சுந்தரி கௌரியே

ஜோதியாய் லிங்கத்தில் பாதியாய் நின்றாயே
ஸ்வர்ண ரேகை என மின்னுகின்றாய்
உன்னிடம் வந்தவர்க்கு ஒருகுறை இல்லை
தன்னையே தந்தவர்க்கு பிறவி இல்லை
தருவாய் நலமும் வளமும் தனமும் புகழும்
குடசாத்ரி மலைச்சாரல் அழகு
கொல்லூரின் நின் கோலம் அழகு
இது தானே சொர்க்கவாசல் என்பாயே
சுகமோ சுகம்

அம்மா மூகாம்பிகே
அம்மா மூகாம்பிகே
அம்மா கொல்லூரின் மகராணியே

(உனைத்தானே)

74. புனித சௌபர்ணிகை

புனித சௌபர்ணிகா நதிக்கரையே
மூகாம்பிஹா ஆலயம் அழைத்திடுதே (புனித)

சிவசக்தி மயமானதே ஜோதிர்லிங்கம்
ஸ்ரீ சக்ரம் எதிரிலே தாயுன் சந்நிதானம்
சௌந்தர்ய லஹரியதை சங்கரர் தந்த இடம்
சஞ்சீவி மாமலைச் சாரலே கோலாபுரம் (புனித)

சரஸ்வதி மஹாலக்ஷ்மி துர்கையும் சேர்ந்தவளே
சாமுண் டேஸ்வரி தேவியே சரண் அடைந்தேனே
மரகத மாணிக்க ஒளிவீசும் மேனியளே
மறு பிறவிப் பிணி நீக்கி அருள்புரிய வல்லவளே
(புனித)

75. பூஜாவிதிகள்

பறவைகள் பாடும் விடியற்காலம்
பள்ளி எழுச்சி ப்ரம்ம முகூர்த்தம்
ஆலய மணியின் ஓசை அழைக்கும்
ஓடியே வரவே ஆசை பிறக்கும் (பறவைகள்)

நிர்மால்யம் நீக்கியபின் திரு மஞ்சனம்
நைவேதயம் கற்பூர ஆராதனை
உற்சவத் திருமேனி ஸ்ரீவேலி
சந்தனம், மலர், தீர்த்தம், திருமதுரம் (பறவைகள்)

உச்சி வேளை பூஜை ஆரத்தி
அர்ச்சனைகள் அலங்காரம் ஆனந்தம்
பள்ளியறை செல்லுமுன்னே கஷாய தீர்த்தம்
பருகுவோர் நோயெலாம் பறந்து போகும் (பறவைகள்)

சங்கரர் வழிபட்ட சுந்தராங்கி
சௌந்தர்ய லஹரிக்கு மனம் இறங்கி
இங்கு வந்து கோயில் கொண்ட அற்புதந்தான்
என்னவென்று சொல்லுவது அம்மம்மா

மூகாம்பிகா அம்மா மூகாம்பிகா
மூகாம்பிகா அம்மா மூகாம்பிகா
மூகாம்பிகா அம்மா மூகாம்பிகா

76. கேசாதி பாதம்

பொழுது புலர இருளை முடித்த குழல் கோமேதகம்
அருணன் கிரணம் விரியும் திருமுகம் அழகு மாணிக்கம்
செவிகள் ஓமெனும் உருவம் காட்டி இதயத்தில் ஒலிக்கும்
சித்திரப்பூ முத்து உதிர பவள இதழ் திறக்கும்
(பொழுது புலர)

புருவம் வில்லாய் கன்னம் நாணாய் நாசி கணை விடுக்கும்
வளைந்த நெற்றி பிறை நிலாவின் அழகை அலங்கரிக்கும்
விழியின் நீல மணிகள் சுழன்று குவளை மலர் தொடுக்கும்
வெண் சங்குக் கழுத்தில் மரகதப் பதக்கம் ஒளி படைக்கும்
(பொழுது புலர)

வைரத் தோள்கள் செறிந்த மார்பு வண்ண வைடூர்யம்
வளைக் கரங்கள் ஏந்தும் புஷ்பம் சங்கும் சக்கரமும்
இடையில் மேகலை நெளிய அமர்ந்த பதும ஆசனமும்
சிலம்பின் ஓசையும் திருப்பாதமும் சிந்தையைக் குலுக்கும்

எந்தன் மெய் சிலிர்க்கும்
எந்தன் மெய் சிலிர்க்கும் (பொழுது புலர)

77. முழுநிலவே மூகாம்பிகையே

கோடி ஜனம் தேடி வரும் உனையே தொழவே
கனிவாய் அருள்வாய் அம்மா
வினைகள் தீர்த்திடுவாய்
மூகாம்பா கொல்லூர் மூகாம்பா
(கோடி ஜனம்)

சௌபர்ணிகை ஆற்றங்கரையில் கோயில் கொண்டவளே
சங்கரா எங்கடா ஒரு பாட்டு என்றவளே
சௌந்தர்ய லஹரி கேட்டு தலை அசைத்தவளே
மூகா சுரன் ஆணவத்தை முறியடித்தவளே
மூகாம்பா கொல்லூர் மூகாம்பா
(கோடி ஜனம்)

மூன்று சக்தி சேர்ந்திருக்கும் மூகாம்பிஹைறயே
ஜோதிர் லிங்க ஒளியினிலே தோய்ந்திருப்பவளே
கோலமா முனிவர் போற்ற கொலு இருப்பவளே
நீல விழிகள் பாலை வார்க்க நெஞ்சில் நிற்பவளே
மூகாம்பா கொல்லூர் மூகாம்பா
(கோடி ஜனம்)

78. அன்னையின் நாட்டியம்

அன்னை ஆடுகிறாள் - அகிலம்
அண்டம் யாவும் பந்து ஆக
சுழற்றி பிடித்து குதித்து களித்து
(அன்னை ஆடுகிறாள்)

வானாட மண்ணாட வளையல்கள் ஆட
கனலோடு புனலாட சிலம்புகள் ஆட
(அன்னை ஆடுகிறாள்)

யாழோசை கலைமகள் விரல் மீட்ட
திருமகள் பூத்தூவ
சிவனவன் தலையாட்ட
கண்கள் ஆட குழையாட - சடைமுடி
திங்கள் ஆட அபிநயமே
பண்கள் பாட இடையாட - ஏழிசை
சந்தம் கூட ஜதிலயமே

வெளியெனும் அரங்கமும் சுழலும்
மறை ஒலி முரசென அதிரும்
தித்தித்தை திதிதத தித்தை
பதங்கள் எழ பதமலர் துள்ளி எழுமே
எத்திக்கும் சித்தர்கணம் சுற்றி
சக்தி என அவள்பெயர் சொல்லி வருமே
முத்துக்கள் பனித்துளிகள் முல்லை
பவள இதழ் மலர்வது நமது தவமே

(அன்னை ஆடுகிறாள்)

தேவர்கள் துதிசெய்து பாராட்ட - நந்தியின்
மேளங்கள் அதிர்வது மெருகூட்ட
பஞ்ச பாணம் அதை ஏந்தி - ரதியொடு
கொஞ்சும் மாறன் வந்தனனே
சண்டி காளி சாமுண்டி - சங்கரர்
சௌந்தர்ய லஹரி கேட்டனளே

கணபதி முருகனும் கண்டார்
மகரிஷி கோலரும் வந்தார்

கொல்லூரில் கொலுவிருக்கும் ராணி
அரக்கன் அந்த மூகனை அழிக்க எழுந்தாள்
பல்லாண்டு தவம்புரியும் முனிவர்
பக்தி கொளும் பரவசம் பார்க்க விரைந்தாள்
எல்லோரும் அவள் புகழைப் பாட
மனமுவந்து அதிசயம் பலபுரிந்தாள்

(அன்னை ஆடுகிறாள்)

79. குடை பிடிக்கும் நாகம்

மூகாம்பிகைத் தாய்க்கு நாகம் குடைபிடிக்கும்
முருகன் வந்திங்கே உருகி தொழுது நிற்கும்
வீரபத்ர சாமி போருக்குத் துணையிருக்கும்
வெற்றித் திருமகளின் சிலம்பொலி எதிரொலிக்கும்
கோலா புரேஸ்வரி கொடுக்கும் மகராசி
மூகாம்பிகா அம்மா அருள்வாள் நல்லாசி

கொல்லூர்க்குச் செல்வார்கள் வல்வினையை வெல்வார்கள்
கோணல் நிமிர்ந்தங்கே ஞானம் பெறுவார்கள்
செல்வக் கலைமகளின் தீராத விளையாட்டு
சேய்கள் நமக்கெல்லாம் தித்திக்கும் தாலாட்டு
கோலா புரேஸ்வரி கொடுக்கும் மகராசி
மூகாம்பிகா அம்மா அருள்வாள் நல்லாசி

அஷ்ட ஐஸ்வர்யம் அளிப்பவள் அவள் தானே
ஐந்துமுக கணபதி அருகில் இருப்பானே
அநுமன் கொண்டுவந்த சஞ்சீவி பர்வதமே
அன்னை அமர்ந்திருக்கும் ஆனந்த ஆஸனமே
கோலா புரேஸ்வரி கொடுக்கும் மகராசி
மூகாம்பிகா அம்மா அருள்வாள் நல்லாசி

நாராயணா என்னும் பாராயணம் கேட்பாள்
தீராத வினைதீர்த்து பக்தர்களைக் கரை சேர்ப்பாள்
ஓராயிரம் நாமம் உரைத்தாலும் போதாது
உள்ளம் கசிபவர்க்கு ஒருகுறை வாராது
கோலா புரேஸ்வரி கொடுக்கும் மகராசி
மூகாம்பிகா அம்மா அருள்வாள் நல்லாசி

80. மூச்சும் பேச்சும் நீயே

மூகாம்பிஹா...... மூகாம்பிஹா - நம்
மூச்சினிலும் பேச்சினிலும் மூகாம்பிஹா

சஞ்சீவிச் சாரலிலே சத்தியத்தின் நித்தியமாய்
தாயிருக்கும் கொல்லூர்க்குச் செல்வோமே - அவள்
சௌந்தர்ய லஹரியிலே தன்னை மறந் தின்புறவே
சந்நிதியில் அன்னை புகழ் சொல் வோமே

மூகாம்பிஹா...... மூகாம்பிஹா - நம்
மூச்சினிலும் பேச்சினிலும் மூகாம்பிஹா

ஊமையையும் பேசவைக்கும் சாமுண்டி சங்கரியாள்
மூகாசுரன் அவனை வதைத்தாள்
தேவியவள் அற்புதங்கள் நாள் தோறும் அதிசயங்கள்
ஜோதிர் லிங்கம் முன்னாலே அமைத்தாள்

மூகாம்பிஹா...... மூகாம்பிஹா - நம்
மூச்சினிலும் பேச்சினிலும் மூகாம்பிஹா

சௌபர்ணிஹை ஆறு தவழ்ந்து வரும் கரையினிலே
சக்தி அவள் வீற்றிருக்கும் கோட்டம்
முற்பிறவிப் புண்ணியத்தால் மட்டிலுமே கிட்டிடுமே
மூகாம்பிஹா தாயின் தோற்றம்

மூகாம்பிஹா...... மூகாம்பிஹா - நம்
மூச்சினிலும் பேச்சினிலும் மூகாம்பிஹா

81. நீ இட்ட பிச்சை

இனி ஒரு முறை நான் பிறந்தாலும்
உனை மறவா நிலை வேண்டுகிறேன் - (தாயே)
நீ இட்ட பிச்சைதானே இந்த சரீரம்
நீ தொட்ட சுகம் தானே இந்த சாரீரம்
மூகாம்பிகா - தாயே - மூகாம்பிகா (இனி ஒரு முறை)

உனை ஒரு நாள் வந்தே சந்தித்தேன் - பின்
ஒவ்வொரு நாளும் சிந்தித்தேன்
மனக்கவலை எல்லாம் அகன்றதம்மா - பின்
மகிழ்ச்சிக்கு மார்க்கம் பிறந்ததம்மா - அம்மா
மூகாம்பிகா - தாயே - மூகாம்பிகா (இனி ஒரு முறை)

தானாகவே கதவை தட்டியதும் - உன்
தண்ணருளை வாரிக் கொட்டியதும்
ஏனோ நான் உன்னை எட்டியதும் - தாய்
மூகாம்பிகா என்று பற்றியதும்

கோயில் கொண்டதுவும் வாழ்வு தந்ததுவும்
அறிந்தேன் - உளம் - தெளிந்தேன்
சாந்த நாயகி சாமுண்டேஸ்வரி
துதித்தேன் - மிக - களித்தேன்
அஞ்சேல் என்றிடு அபயம் தந்திடு
சரணம் சரணம் அம்மா - உன்
தாள்மலர் சரணம் அம்மா
அம்மா மூகாம்பா கொல்லூர் மூகாம்பா
தாயே மூகாம்பா தாயே மூகாம்பா (இனி ஒரு முறை)

ஸ்ரீ தேவி மூகாம்பிகே - உன்
சிலம்போசை ஒலி கேட்குதே
சிங்கத்தின் மேலேறி வந்தாயே மகராசி
மங்களத் திருக்காட்சியே - ஜெகம்
எங்கும் உன் அரசாட்சியே - அம்மா (ஸ்ரீ தேவி)

உன் கோயில் மணி நாதமே - அது
என் நாவில் இசையாகுமே
அன்னை நின் மலர்ப்பாதமே
பேரானந்த சுகபோகமே

உன்பார்வை என் பாடல் சந்தம் - இனி
நாளும் என் வாழ்வில் வசந்தம்
முத்துக் கொழிக்கும் மோஹனப் புன்னகை
அமுதோ செந்தமிழோ முழுநிலவோ
புலர் காலைப் பொழுதோ
(ஸ்ரீ தேவி)

கொல்லூரின் மாணிக்கமே - என்
குலம் காக்கும் சௌபாக்யமே
செல்வத்தின் மணி மாடமே - ஒரு
சிங்காரப் பூந்தோட்டமே

உன் வதனம் அது அழகின் ஆலயம்
என் இதயம் உன் நடனத்தின் லயம்
அன்பின் வடிவே அணையாச் சுடரே
வாணி, மகாலக்ஷ்மி, சிவ சக்தி
மூவரும் சங்கமமோ (ஸ்ரீ தேவி)

82. தங்கமுகம்

தங்க முகம் தாயின் மேனி ரத்தினம்
கோமேதகம் புஷ்பராகம் வைரம் முத்தாரம்
சிங்க வாஹனம் அதன் மேல் அமர்ந்த கோலம்
சிவ யோஹம் பத்மாசனம் தரிசனம் சொர்க்க லோகம்
(தங்க முகம்)

கோலாபுரம் மூகாம்பிகை
கொலுவிருக்கும் காட்சிக்கு
வேறேதும் ஈடில்லை
வியப்பின் பேரெல்லை

செங்கமலம் கைகள் அபயம் வரதம்
சங்குசக்ரம் தருமே சாப விமோசனம்
செம்பவள இதழ்கள் சிந்தும் வைடூர்யம்
மரகதப் பசுமைதரும் அருள் மிகு சந்நிதானம் (தங்க முகம்)

கோலாபுரம் மூகாம்பிகை
கொலுவிருக்கும் காட்சிக்கு
வேறேதும் ஈடில்லை
வியப்பின் பேரெல்லை

பங்குனி மாதம் வசந்த விழா உற்சவம்
புரட்டாசி நவராத்ரி ஒளிவெள்ளம் கரைபுரளும்
சங்கரரின் த்யானம் தந்த மெய்ஞ்ஞானம்
சாமுண்டி ஈஸ்வரி தருவது சந்தோஷம் (தங்க முகம்)

கோலாபுரம் மூகாம்பிகை
கொலுவிருக்கும் காட்சிக்கு
வேறேதும் ஈடில்லை
வியப்பின் பேரெல்லை

83. சத்தியத்தின் நித்தியம்

ஸஹ்யாத்ரி மலைச்சரிவில் சத்தியத்தின் நித்தியமாய்
தாயிருக்கும் கொல்லூர்க்குச் செல்வோம்
ஸௌந்தர்ய லஹரியிலே சங்கரர் திளைத்திருந்த
சந்நிதியில் அன்னைபுகழ் சொல்வோம்
(ஸஹ்யாத்ரி)

துக்கம் வந்து கவ்வுகையில் துயர்துடைக்க உமையவளே
இத்தரையில் எழுந்தருளி நின்றாள்
சொல்லெடுத்துப் பேசாத ஊமையும் கவிபாடும்
அற்புதத்தை விளைவிக்க வந்தாள் (ஸஹ்யாத்ரி)

ஸௌபர்ணி நதிக் கரையில் சாந்திமிகும் சூழ்நிலையில்
சக்தியவள் வீற்றிருக்கும் கோட்டம்
முற்பிறவிப் புண்ணியத்தால் மட்டிலுமே கிட்டிடுமே
மூகாம்பிஹா தேவி தோற்றம் (ஸஹ்யாத்ரி)

கல்வி தரும் கலைமகளாய் செல்வம் தரும் திருமகளாய்
எல்லையிலா அழகை அள்ளி இறைப்பாளே
கௌரியவள் விளையாட்டு கணக்கெடுத்து முடியாது
கால் பிடித்தார் கவலையெலாம் துடைப்பாளே
(ஸஹ்யாத்ரி)

84. சிவசக்தி

கொல்லூரில் வாழ்கின்ற
செல்வியே சிவசக்தி
ஸ்ரீ தேவி மூகாம்பிஹே
குடசாத்ரி குன்றிலே
நவராத்ரி தேவியே
கொலுவிருக்கும் சாமுண்டியே
ஸ்ரீ ரஞ்சனி ஜெயதுர்க்கையே (கொல்லூரில்)

தங்க மலர் மேனி சூர்யப்ரஹாஸம்
ஜகஜ்ஜோதி அலங்காரமே
அன்பு விழிவண்டு சந்த்ர ஒளி கொண்டு
கொஞ்சு மொழி ஆனந்தமே (கொல்லூரில்)

சிங்கத்தின் மேலமர்ந்த
தேவி திருக்கோலம்
சங்கரியும் கலைமகளும்
இருபுறமும் சூழும்
பத்ம மலர் ஆசனம்
பத்மினியின் யோஹம்
பார்த்தவர்கள் வாழ்க்கையிலே
நாளும் அநு கூலம் (கொல்லூரில்)

தருகின்ற குங்குமம் தாலி பாக்யம்
சந்தனத்தால் சந்தான பேறு வாய்க்கும்
நள்ளிரவு தீர்த்தம் நோயை நீக்கும்
நாயகியின் பார்வையது நன்மை சேர்க்கும் (கொல்லூரில்)

கோலரிஷி போற்றிய குலமாமணி
ஸ்ரீ சக்ர ரூபிணி சிந்தாமணி
மார்க்கண்டர் பூஜித்த மனோன்மணி
வீரபத்ரர் வணங்கும் விநோதினி

சங்கரர் சௌந்தர்ய லஹரி நீ
சர்வசக்தி லக்ஷ்மி சௌதாமினி
ஜகன்மோஹினி (கொல்லூரில்)

85. எங்கும் இயற்கை

விருத்தம் :

வனப்பை வாரி இறைக்குது வானம்
வானை நோக்கிப் பாடுது வையம்
அனைத்தும் ஆதி பராசக்தி காட்சி
அன்னை மூகாம்பிகை அவளின் மாட்சி

பாடல் : எங்கும் இயற்கை கொஞ்சிக் குலுங்கும்
இன்ப சாம்ராஜ்யம் - அன்னை
இருக்கும் இடத்தில் பசுமை குளுமை
இனிய சங்கீதம் - நெஞ்சில்
வளரும் சுகராகம் (எங்கும்)

சிங்கம் திரியும் செறிந்த காட்டில்
தேவி வனவாசம் - அவள்
சிரித்த முகத்தில் தெறிக்கும் ஒளியே
நிலவின் பிரகாஸம் - அது
அழகின் உல்லாஸம் (எங்கும்)

எண்பத் தொன்று கோண மண்டம்
நடுவில் சுடர்வீசும் - ஆஹா
இவளின் பார்வை என்ன சொல்ல
விழிகள் மொழி பேசும் (எங்கும்)

சண்டி பாலா அன்பு மூகாம்பா
கொல்லூரில் வாசம் - ஒரு
தாய்க்கும் மேலாய் காக்கும் நேசம்
எத்தனை பாசம் - அம்மா
என்றும் சந்தோஷம் (எங்கும்)

86. என்று கேட்பாய் என்பாடல்?

தாயே உன் தயவே
என்றும் வேண்டும் அம்மா
நீ தான் செல்வம் நீதான் தெய்வம்
வேறெதும் வேண்டேன் அம்மா - உன்
பாதம் போதும் அம்மா (தாயே)

கோயில் வாசல் கோலங்கள் வரைந்தேன்
கதவம் திறந்தே பாராயோ
நேரில் பேச ஆவலாய் நின்றேன்
நெஞ்சம் கனிந்தே வாராயோ
கொல்லூர் வாழும் மூகாம்பா
பிள்ளையை ஏற்றிடுவாய் (தாயே)

சங்கரர் பாடும் சௌந்தர்ய லஹரி
சங்கரி உன்னை மயக்கியதோ
அந்தணர் பாடும் வேதத்தின் நாதம்
அன்னை உன்னை நிறுத்தியதோ

ஏழை பாடும் பாடலையும்
என்று நீ கேட்டிடுவாய் (தாயே)

87. கொல்லூர் மூஹாம்பிகை

உனை மறக்க முடியாதம்மா மூகாம்பிஹா - என்
உயிரினிலே கலந்திருப்பாய் மூகாம்பிஹா

நின்கோயில் மணியின் ஓசை என்நெஞ்சில் நீங்கா ஆசை
நீலவான வெளியில் ஒளியில் ஓம் நாத ஒலியின் ஓசை
கண்பறிக்கும் மின்னல் கோடி பொன் தெறிக்கும் உந்தன் மேனி
என் வாழ்வின் வசந்தமே நீ தென்றலாக வந்தாய் தேவி

அன்று நான் உன் முகத்தில் ஆயிரம் கவிபடித்தேன்
அழகெலாம் உன்னிடத்தில் அடைக்கலம் அதை சுவைத்தேன்
அந்த நாள் முதலாகவே அனைத்தையும் மறந்து விட்டேன்
அம்பிஹே நவதுர்க்கா அடிமையாக ஆகிவிட்டேன்

உனை மறக்க முடியாதம்மா மூகாம்பிஹா - என்
உயிரினிலே கலந்திருப்பாய் மூகாம்பிஹா

எந்த நாள் வந்தேன் அன்றே இதயத்தை கவர்ந்தாய் தாயே
இருக்கும் நாள் வரையும் எல்லா பொறுப்பையும் ஏற்பாய் நீயே
சொந்த மாய் உன்னை அல்லால் துணையாக வருவார் இல்லை
தொடர்கிறேன் பயணம் உந்தன் அன்புக்கோர் எல்லை இல்லை

உனை மறக்க முடியாதம்மா மூகாம்பிஹா - என்
உயிரினிலே கலந்திருப்பாய் மூகாம்பிஹா
மூகாம்பிஹா
மூகாம்பிஹா

88. ஓங்கார நாயகி

ஓங்கார நாயகியாள் உலகம்மை வந்தாள்
ஊமையையும் பேசவைக்க உமையவள் வந்தாள்
மூடனையும் கடைத்தேற்ற பார்வதி வந்தாள்
மூகாம்பிகை என்றே கொல்லூரில் நின்றாள்

சங்கரி வந்தாள் - சுப
மங்களம் தந்தாள் (ஓங்கார நாயகியாள்)

அதிகாலை சுபவேளை சரஸ்வதி ஆனாள்
ஐஸ்வர்யம் அளிக்கின்ற திருமகள் ஆனாள்
அரணாகும் திரிசூலி துர்காவாய் ஆனாள்
அனுதினம் முக்கோல அம்பிகை ஆனாள்

சிங்கத்தில் வந்தாள் - சுப
மங்களம் தந்தாள் (ஓங்கார நாயகியாள்)

எத்திசையும் குடியிருக்கும் சக்தி எழுந்தாள்
தித்திக்கத் தித்திக்கத் திருக்கோலம் கொண்டாள்
சஹ்யாத்ரி மலைச்சாரல் சந்நிதி கண்டாள்
சௌந்தர்ய லஹரியில் தன்னை மறந்தாள்

அன்பொடு வந்தாள் - சுப
மங்களம் தந்தாள் (ஓங்கார நாயகியாள்)

89. மூன்றாம் கட்டளை மூகாம்பிகை

ஊனாகி உயிராகி உயிரோடு நாளும்
உறவாடும் தாயே வா - சுவைத்
தேனாகித் தவழ்ந்தோடி விளையாடும் தமிழே
திருப்பாதம் மலர் தூவ வா?
ஒரு கோடி கவி பாட வா (ஊனாகி)

நீ வேண்டும் எப்போதும்
நினைவேண்டும் வரம் வேண்டும்
தாலாட்டத் தாய்வேண்டுமே
நினை நாடி வருவோரின் வினை ஓட அருள்வாயே
புதி தான வழி தோன்றுமே - உன்
விழிப்பார்வை அமுதாகுமே (ஊனாகி)

சாந்தமே உருவாகி
சந்நிதியில் நீ வந்து
காந்தமாய் ஒளி வீசுவாய்
மூன்றாம் கட்டளையில்
வாழ்கின்ற மூகாம்பா
வேண்டுதல் நிறை வேற்றுவாய் - சுக
வீணை அதை நீ மீட்டுவாய் (ஊனாகி)

90. எழு நிலைமாடம்

ஆகாயம் தீ, நீர், காற்று, மண் சேர்ந்த
கோலத்தைக் காட்டுகிறாள் கொல்லூரில் தேவி
மூல ஆதாரம் புவி என்று சொல்லி
மூன்றாம் கட்டளைக்கு கல்லுருவில் வந்தாள்

காடுமலை சூழிடத்தில் வாழ்கின்ற அன்னை
நாடு விட்டு நாடு வந்து நம்மிடத்தில் நின்றாள்
காலடியார் பின் தொடர்ந்த ஆதிசக்தி அம்மா
காஞ்சிபுரம் அருகினிலே வாஞ்சையுடன் வந்தாள்

சித்தர் மனம் மெச்சிடவே உத்தமியாள் வந்தாள்
சுற்றி வரும் நாகமதை மடியினிலே கொண்டாள்
நித்த நித்தம் அற்புதங்கள் நிகழ்த்திடவே வந்தாள்
பக்தி செயும் அடியவர்க்கு பாதமலர் தந்தாள்

கண்ணாடி ஓவியத்தில் கண் சிமிட்டி சிரிப்பாள்
காற்றினையே அடக்கிடவே கற்றுக் கொள் என்பாள்
என்னோடு இவள் கொண்ட இனிதான பந்தம்
இன்று நேற்றல்லவே என்றென்றும் சொந்தம்

எழுநிலை மாடத்தில் ஏறிவா என்றே
கோபுரம் அமைத்திடவும் குறிப்பாக உரைத்தாள்
த்யானத்தில் எனை நிறுத்தி மண்டபத்தில் அமர்ந்து
வானத்தில் உனைக் காண வருக என அழைத்தாள்

வருக என அழைத்தாள்
வாழ்க என உரைத்தாள்

91. முக்கோணச் சக்கரத்தில்

மூன்று வனம்
இணைந்தால்
முக்கோணச் சக்கரம்
தோன்றுதம்மா - அதிசயம் தொடருதம்மா
மாங்காடு ஒரு புள்ளி
வேற்காடு ஒரு புள்ளி
மறுபுள்ளி நடுவினிலே கொலு அமர்ந்தாள்
மஹாலக்ஷ்மி எழுந்தருளி அருள் புரிந்தாள் (மூன்று வனம்)

பலகாலம் கொல்லூரில்
வரம் வேண்டி ஜெபம் செய்த
பலனாக மூகாம்பா இங்கு வந்தாள்
திரிவேணி சங்கமத்தில்
சிவலிங்கம் அதைத் தந்து
பிரதிஷ்டை செய் யென்றே ஆணையிட்டாள்
ஜெகஜ்ஜோதி சிவசக்தி
நடுவாக ஒளிமின்னல்
திருமுருகன் குன்றத்தூர் ஒரு பக்கம்
பரமசிவன் தவம் செய்யும்
பழந்தமிழ்த் திருத்தலமாம்
கோவூர் அமைந்ததுவே மறுபக்கம் (மூன்று வனம்)

திரு நீர் மலைமேலே
முறைவைத்து சேவிப்பார்
ஒரு மூன்று கட்டளைகள் உள்ளதென்பார்
கடவுளின் கட்டளையை
உறுதி செய்யும் வகையில்

காமாட்சி சங்கு சக்ரம் ஏந்தி வந்தாள்
உரியவர் யாரிடத்தில்
ஒப்படைப்ப தென்றெண்ணி
அபிராம புரத்தினையே தேடி வந்தாள்
பெரியதோர் ஆலயத்தை
உருவாக்கிக் கொண்டாளே
மூன்றாம் கட்டளையின் மூகாம்பா (மூன்று வனம்)
மூகாம்பா தேவி மூகாம்பா

92. கொல்லூர் தேவி

பர்வத வர்த்தினி மகிஷ மர்த்தினி
உமா மஹேஸ்வரியே
கொல்லூர் கோயிலில் கொலு அமர் தேவியே
கௌரி பகவதியே

திருக் கடவூரினில் தரிசனம் தருகின்ற
அபிராமி அம்மா
சிதம்பரத் தலத்தினில் சிற்றம் பலத்தினில்
சிவகாமி அம்மா

தேடி நீ வந்தனை ஆலயம் கண்டனெ
தினந் தொறும் அதிசயமே
மூன்றாம் கட்டளை மூகாம் பிகை என
தோன்றினை அற்புதமே

கம்ஹா சூரனை மூகனாய் மாற்றிய
கால பைரவியே
சிம்ஹ வாஹினி திரிபுர சுந்தரி
சர்வ மங்களையே
ஆதி சங்கரர் பாடிய சௌந்தர்ய
லஹரியில் ஆழ் பவளே
கோல மகரிஷி வேண்டுதல் கேட்டதும்
ஸ்ரீ சக்ரம் அமர்ந்தவளே

ஜெயஜெய காளி மஹாலக்ஷ்மி சரஸ்வதி
மூவரும் ஆனவளே
ஜெயஜெய ஜோதிர் லிங்கத்தில் பங்கு கொள்
அர்த்தநா ரீஸ்வரியே

நவரஸம் படைப்பதில் நளின லாவண்யை
நவசக்தி நாயகியே
சாந்தி மயமாய் த்யானத்தில் ஆழ்ந்திடும்
ராஜ ராஜேஸ்வரியே - ஸ்ரீ
ராஜ ராஜேஸ்வரியே

கலைமாமணி

டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்
அவர்களின் கவிதை படைப்புகள்

1. விநாயகனே வினை தீர்ப்பவனே!
2. நீ அல்லால் தெய்வம் இல்லை - முருகா! (பாகம் - 1)
3. முருகா! முத்துக்குமரா! (பாகம் - 2)
3. அன்பே சிவம்!
4. திருப்பதி மலை வாழும் வெங்கடேசா!
5. சாமி திந்தக்கத்தோம் தோம்!
   ஐயப்பன் பாடல்கள் (பாகம் - 1 & 2)
6. ஶ்ரீ ராம்! ஜெயராம்!
7. கண்ணா! கார்மேக வண்ணா!
8. நவகோள் நாயகர்
9. நவராத்ரி நாயகியர்
10. ஶ்ரீ சக்ர நாயகி
11. என் தாயே ஈஸ்வரியே!
12. ஓம் சக்தியே! பராசக்தியே!
13. மாரி மகமாயி, காளி கருநீலி
14. அம்மன் பாமாலைகள்
15. செல்வமே! திருமகளே
16. ஜெய ஜெய சங்கர!
17. ஷீரடி செல்வம்

18. அருள் ஒளி

(ஸ்ரீ யோகிராம் சுரத்குமார் பாடல்கள்)

19. ஞாலம் போற்றிய ஞானியர்

20. மாதாவே! மரியே...!

21. மாசிலா ஏசு

22. மழலை செல்வங்கள் (குழந்தை பாடல்கள்)

23. நிலா நிலா ஓடிவா....! (1) (குழந்தை பாடல்கள்)

24. நிலா நிலா ஓடிவா....! (2) (குழந்தை பாடல்கள்)

25. தம்பி உன்னை நம்பி! (குழந்தை பாடல்கள்)

26. புகழோடு தோன்றுக (சான்றோர் பாடல்கள்)

27. காதல்! காதல்!

28. என் இரு விழிகள்

29. எண்ணிப் பார்க்கிறேன்

30. தமிழ் மொழிபெயர்ப்புகள் - (பாகம் - 1)

31. தமிழ் மொழிபெயர்ப்புகள் - (பாகம் - 2)

32. தமிழ் மொழிபெயர்ப்புகள் - (பாகம் - 3)

33. பாத மலர்கள்

34. இசை மாலை

35. சாரல்

36. பொங்க புனல்

37. கங்குள் வெள்ளம்

38. இன்பத் தீ

39. செக்கர் வானம்

40. அன்னையடா அன்னை

41. வளரும் பயிர்

42. பொன்மாரி மொழிகள்

43. மலேசிய திருத்தலங்கள்

இருபதாம் நூற்றாண்டின் பக்தி இலக்கியப் படைப்பாளிகளில் குறிப்பிடத்தக்கவர். இவர் தனது பக்திப் பாடல்களால் தமிழிசைக்கு ஒரு புதிய எழுச்சியினை தோற்றுவித்தவர்......!

இருபதாம் நூற்றாண்டின் துவக்க ஆண்டுகளில், வேற்று மொழி கீர்த்தனைகளுக்கு, பாடலின் பொருள் விளங்காமல், வெறும் இராகத்திற்காகவும், இசைக் காகவும் தலையாட்டி வந்த தமிழ் மக்களுக்கு, எளிய மொழியில், இனிய தமிழில், தமிழிசையை அறிமுகம் செய்து வைத்தவர்......!

இவர்...
தமிழிசைக்கும், இறையுணர்விற்கும் இடையே பாலமாய் இருந்தவர்......!

உளுந்தூர்ப்பேட்டை சண்முகம் என்று அனைவராலும் அன்போடு அழைக்கப் பெறும் இவர் விருந்தோம்பலில் நிகரற்றவர்......!

ஏறக்குறைய நான்காயிரம் பக்தி இசைப் பாடல் களுக்கு மேல் இயற்றி சாதனை படைத்தவர்......!

இவர், திரை இசைப் பாடல்கள், மொழிமாற்றப் பாடல்கள், கவிதைகள், கவியரங்குகள், சிறப்புச் சொற் பொழிவுகள், பட்டிமன்றங்கள், பக்திப் பாடல்கள், தனிப் பாடல்கள் இயற்றுதல் போன்ற பல சிறப்புத் திறன்களைக் கொண்ட பன்முக ஆளுமை படைத்தவர்.

நெய்தல்
பதிப்பகம்